# பாதுகாவலன்

PATHUKAVALAN


**மறைவட்டப் பரிபாலகர்**

யாழ். ஆயர் கண் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ளதால், தமக்குப் பதிலாக யாழ். மறைவட்டத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை, யாழ். மறைவட்டக் குருமுதல்வர் அருள்திரு எஸ். ஏ. மைக்கல்சாமி அ.ம.தி. அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி யாழ். ஆயர் கோரியுள்ளார்.


மலர் 113 இதழ் 29 21-8-1987 (ஆகஸ்ட் 16—ஆகஸ்ட் 23) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


### தேசிய ஒப்புரவாதலுக்காக இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கம் விடுத்துள்ள அறைகூவல்:

# பதவிக்காக, மக்கள் சிலரின் புகழ்ச்சிக்காகப் பக்கச்சார்புடையோராகச் செயற்படுவது தவறு

''நல்லெண்ணத்துடன் உதவிக்கரம் கொடுக்கவந்த விருந்தினரான இந்தியப் பிரதமருக்கு இழைக்கப்பட்ட அவமரியாதையால், ஆழ்ந்த கவலையும், அவமானமும் அடைந்துள்ளோம்'' எனக் குறிப்பிடும் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கத் தலைவர் பேரருள்திரு பிராங் மாக்கஸ் பெர்ணண்டோ ஆண்டகை, தம் அறிக்கையில் ''நீதியான நிரந்தர சமாதானத்துக்கான நம்பிக்கையைத் தரும் சந்தர்ப்பத்தைத் தட்டிக்கழிக்கக்கூடாது'' எனக் கேட்டுள்ளார்.

ஆகஸ்டு 1ஆம் திகதி, கொழும்பில் வெளியிட்டுள்ள இலங்கை ஆயர் சங்க அறிக்கையில், தென் பகுதியில் நடைபெற்ற அரசுக்கெதிரான வன்முறைகளைக் கண்டித்துள்ளதுடன் ''பதவிக்காகவும், மக்கள் சிலரின் புகழ்ச்சிக்காகவும் பக்கச்சார்புடையவர்களாகச் செயற்படுவது எம்மை எங்கும் கொண்டு செல்லாது. மனமும் உள்ளமும் மாற்றமடைந்து, எல்லா மதத்தினரும் போற்றும் அன்பு, மன்னிப்பு, தாழ்ச்சி, கடின உழைப்பு, உயிரை மதித்தல் போன்றவற்றைத் தேடவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

''தேசிய ஒப்புரவாகுதலுக்கும் ஐக்கியத்துக்குமாக அதிக முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். கசப்பானவற்றைப் போக்கி, வேதனைப்பட்டவர்களை மீண்டும் குடியமர்த்த வேண்டும். கிறிஸ்தவ சமூகமானது இதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கும்'' எனக் குறிப்பிட்டுள்ள ஆயர்சங்கத்தினர் ''நன்மனத்தோர் எப்போதும் சமாதானத்தையே ஆவலாகத் தேடியுள்ளனர்; சமாதானத்துக்கான உன்னத முயற்சிக்கு எவ்வித் தியாகமும் ஈடாகாது'' என்றனர்.

## வங்காலை ஆலயவிழா

வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்திருவிழா ஆடித் திங்கள் நடைபெற்றது.

23-7-87 வியாழன் அன்று மாலை மரியன்னையின் ஆண்டினைச் சிறப்பிக்குமுகமாக மரியாயின் சேனைகள், மாதா கூட்டத்தினர்கள், பாடசாலைச் சிறுர்கள், பக்திச்சபையினர் அனைவரும் வெண்ணுடை தரித்து, மரியன்னையின் திருச்செபமாலைப் பவனியை அழகுபடுத்தினர், பாடல்கள், பஜனைகள் இசைத்து 'தாயிற்சிறந்த தோர் கோவில் இல்லை' என்ற தலைப்பில் தாய்க்குலமும் சேய்க்குலமும் மகிழ்ச்சியும் எழுச்சியும் கூரப் பவனி பக்திப்பரவசமாகக் காட்சியளித்தது.

24-7-87 வெள்ளி அன்று ஒப்புரவுத் தினமாக திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, நாள் முழுவதும் ஒப்புரவுச் சாதனம் வழங்கப்பட்டது.

சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றிருந்த எம் பங்கு மக்கள் அதிகமானோர் திரும்பிவந்து இவ்விழாவில் அமைதியுடனும் மகிழ்ச்சியாகவும் கலந்துகொள்ள இறைவன் வழிவகுத்தார்.

## மன்னுரிற் குருப்பட்டம்

## மறை ஆசிரியருக்குப் பாராட்டு



மறை ஆசிரியராகப் பணியேற்றுப் பதினைந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள திரு. இ. மரியதாஸ் ஜெயசீலன் மாதகற் பதியிலே பிறந்து இளவாலையிற் கல்வி கற்று, வாலிபப் பருவத்திலேயே மறை ஆசிரியராகப் பணி புரிய இறைவனின் அழைப்பை ஏற்றுர். ஆயர் எமிலியானுஸ் பிள்ளை இவரை யாழ்ப்பாணத்திலும் பின்னர் இந்தியாவிலுள்ள திண்டிவனத்திலும் மறை ஆசிரியராகப் பயிற்சிபெற அனுப்பி வைத்தார். பருத்தித்துறை, முருங்கன், மயிலிட்டி-ஊறணி ஆகிய பங்குகளிலே பங்குத் தந்தையரோடு நெருங்கி உடனுழைத்து, பொது நிலையினரை இறை குலமாக உருவாக்குவதிலே இவர் அளப்பரிய பணி ஆற்றியுள்ளார்.

மயிலிட்டிப் பங்கில் இவருக்கு நடந்த பாராட்டு வைபவத்தில் உரையாற்றிய பங்குத் ... தியாப்பிள்ளை அடிகள், 24 மணிநேரமும் தமது சேவையை மனமுவந்து வழங்கத் தயாராயிருக்கும் இவரது பெருந்தன்மையைப் பாராட்டினுர். ''கருத்தரங்கு, பொருட்காட்சி, பொம்மலாட்டம் போன்ற பல்வேறு ஊடகங்கள் வழியாக இவர் சிறுவர்க்கும் முதியோர்க்கும் மறைக் கல்வி ஊட்டுகின்றுர். அதே வேளை பங்கிலே பொது நிலையினர்க்கென்று பற்பல அமைப்

வும் கலந்துகொள்ள இறைவன் வழிவகுத்தார்.


சி. அ. லெம்பேட்

ருக்கு நடந்த பாராட்டு வைபவத்தில் உரையாற்றிய பங்குத் தந்தை அருள்திரு. கே. பீ. சந்

வேளை பங்கிலே பொது நிலையினர்க்கென்று பற்பல அமைப்புக்களை உருவாக்கி சுறுசுறுப்புடன் வழிநடாத்துகின்றார்'' என்று புகழுரை சாற்றினார்.

தகவல்:- சூ. மரியராணி.

# மன்னாரிற் குருப்பட்டம்



பொன்தீவுகண்டலைச் சேர்ந்த திரு, திருமதி. அ. அந்தோனி சுபபாக்கியம் தம்பதிகளின் புதல்வன் அருட்செல்வன் அ. செபமாலை வருகிற 19ஆம் திகதி காலை 9-30 மணிக்கு, மன்னார் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால், மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.

பொன்தீவுகண்டல் புனித அந்தோனியார் பாடசாலை, மன்னார் புனித சவேரியார் கல்லூரி, இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி ஆகியவற்றிற் கல்வி பயின்ற இவர், 1978 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புனித மாட்டினார் குருமடத்திற் சேர்ந்து, 1979 இல் கண்டி தேசிய குருமடம் சென்று தனது மெய்யியற் கல்வியைப் பயின்றார். தனது இறையியற் கல்வியை 1983 ஆம் ஆண்டு முதல், கொழும்புத்துறைப் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிற் கற்று முடித்தார்.

இவர் தனது முதல்திருப்பலியை 20ஆம் திகதி காலை 9 மணிக்குப் பொன்தீவுகண்டல் புனித அந்தோனியார் ஆலயத்தில் நிறைவேற்றுவார்.

## பிதா மார்சலீயார் மாற்றலாகின்றார்

யாழ் மண்டைதீவு எனுமிடத்தில் பிறந்து அமலமரித்தியாகள் சபையிற் சேர்ந்த வண. மார்சலியார் சுவாமியார், நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு தூயசெபஸ்தியார் ஆலயத்தின் கட்டளைக் குருவாக முதலாவதாக நியமனம் பெற்று 7 வருடமாகச் சேவை செய்தார். அவர் காலத்திற் பல நவகுருமார் உதித்தனர். ஆலய 50வது யூபிலி வருடத்தைச் சிறப்புறக் கொண்டாடினார். ஆலயத்தையும் சிறப்புறச் செய்தார். மாபெரும் ஆலய மணிகளையும் பொருத்தினார். பங்கு மக்களின் பெரும்பாலானோர் மீனவராயிருந்ததால் அவர்கள் தொழில் முன்னேற்றத்திற்காகக் கடற்றொழில் மந்திரியைப் போல் அரும்பாடு பட்டார். மக்களின் உள்ளங்களையும் கவரச் செய்தார். பழங்கால மக்கள் நன்மதிப்பைப் பெற்ற மர்சலின் சுவாமியாரைப் போல் இவரும் 2வது மர்சலின் சுவாமியாகப் பதவி வகித்து எம் பங்கை விட்டு மணிலா செல்லவிருக்கின்றார். பிதா J. J. இம்மானுவேல் இங்கு மாற்றலாகி வருகின்றார்.

தகவல்; எம்மானுவேல் அண்ணாவியார்.

## பிரார்த்தியுங்கள்

மத்திய அமெரிக்க நாடுகளில் அமைதி ஏற்படப் பிரார்த்திக்குமாறு உலக மக்களைத் திருத்தந்தை கேட்டிருக்கிறார். மத்திய அமெரிக்க மண்டலம் முழுவதிலும் வாழும் மக்களது மனித உரிமைகள் மதிக்கப்பட்டு, சமூக தர்மத்தின் அடிப்படையில் அமைதி ஏற்பட வேண்டுமென்று ஆகஸ்டு 5ஆம் திகதி புதன் கிழமை வத்திக்கான் நகரில் திருத்தந்தை கூறினார்.

## யாழ். மறைவட்டப் புதிய நியமனங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அருள்திரு. ஜே. மரிய செபஸ்ரியன், பங்குத்தந்தை, தாளையடி.

அருள்திரு. எஸ்தகூர் செபஸ்ரியன்,
பங்குத்தந்தை, சேந்தாங்குளம்

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# தோலகட்டி ஆச்சிரமத்தில் மீண்டும் துறவிகள்

கடந்த பங்குனி மாதம் 5ஆம் தேதி, இலங்கை இராணுவத்தினர் தோலகட்டி ஆச்சிரமத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து, அங்கிருந்த செபமாலைத் தாசர் சபைத் துறவிகளை வெளியேற்றிவிட்டுத் தாங்கள் அங்கு குடியிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். தற்போதைய இந்திய - இலங்கைத் தலைவர்களின் ஒப்பந்த அடிப்படையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பிற்பாடு, இம் மாதம் அதாவது ஆவணி மாதம் 5ஆம் நாள் இராணுவத்தினர் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறிய செய்தியை 6ஆம் தேதி காலையில் அறிந்த துறவிகள் உடனேயே அங்கு சென்றனர். அப்போது ஆச்சிரமம் இருந்த நிலையைக் கண்டு துறவிகள் மிகவும் அதிர்ச்சி அடைந்தனர்.

பெரிய ஆலயத்தினுள்ளும் சிறிய ஆலயத்தினுள்ளும் வெறுமையாக இருந்த நற்கருணைப் பேழைகள் உடைக்கப் பட்டிருந்தன. மின் விளக்குகளும் அதற்குரிய கருவிகள் அனைத்துமே அகற்றப்பட்டிருந்தன. செபமாலைத்தாசர் சபை, செபமாலைக் கன்னியர் சபை ஆகியவற்றை நிறுவியவரும் மக்களாற் புனிதர் எனப் போற்றப்படுபவருமான அருள் தந்தை B. A. தோமஸ் O.M.I அடிகளாரினதும், செபமாலைத் தாசர் சபையின் உயர் தலைவராக இருந்து மறைந்த அருள் தந்தை ஜோண் பப்ரிஸ்ற் பாக்கியநாதர் C. R. அவர்களினதும் கல்லறைகள் உடைக்கப்பட்டு ஒரு பகுதி திறக்கப்பட்ட நிலையிற் காணப்பட்டன.

கண்ணுக்குக் குளிர்ச்சியான, பசும் சோலையாகக் காட்சி தந்த ஆச்சிரமத்தின் சுற்றுடலானது, எல்லாப் பயிர்களுமே கருகிய நிலையில் வரண்ட பாலை நிலமாக நிலை கொண்டிருந்தது. இனிமையான பழரசப் பானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையானது முற்றுகச் சேதமாக்கப் பட்டிருந்தது. தளபாடங்களும், படுக்கைகளும் இன்னும் எண்ணற்ற பொருள்களும் முற்றுக எடுக்கப்பட்ட நிலையிற் பாழடைந்த மண்டபம் போல ஆச்சிரமம் காட்சி அளித்தது.

இந்நிலை கண்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த துறவிகள், இல்லாமையிலும் இறைவனை நம்பித் தங்கள் செப வாழ்வை உடனேயே அங்கு ஆரம்பித்துள்ளார்கள். அவர்களின் செபவாழ்வு சிறந்து விளங்க நாம் இறைவனை மன்றுடுவோம்.

வாழ்வுதரும் இறைவாக்கு

*மகிழ்ச்சியூட்டும்*
*நற்செய்தியை அறிவிக்கவும்,*
*சமாதானத்தையும்*
*மீட்பையும் தெரிவிக்கவும்,*
*வருகிறவருடைய மலரடிகள்*
*எத்துணை*
*அழகாய் இருக்கின்றன.*

இசை. 53:7

இறைவாக்கு வாழ்வுதரும்

# விடுதலைப் போரிற் பலியான வீரத்துறவி

## முத்திப்பேறுபெற்ற ஈடித் ஸ்ரெயின் (எஸ். எம். ஜே.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

மடத்தின் தலைவியின் ஒப்புதல்கிடைத்தது. 1933ம்ஆண்டு ஐப்பசிமாதம் 14ம் நாள் புனித அவிலா திரேசாவின் திருநாளன்று ஈடித் கார்மேல் மடத்திற்சேர்க்கப்பட்டாள். அவளது வீட்டிலே, ரோசா என்ற சகோதரியை விடத் தாயும் மற்றையவர்களும் அவள் மடத்திலே சேருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். 1933 ஐப்பசி பன்னிரண்டாந் திகதி ஈடித்தின் பிறந்ததினம். அதுதான் அவள் இறுதியாகத் தனது இல்லத்திற் செலவிட்டநாளாகும். தன் தாயுடன் செபக்கூடஞ் சென்று வழிபட்டுவிட்டு, வீடு சென்று விடைபெற்று, கேலோங் நகருக்குப் புறப்பட்டாள். கார்மடத்துக் கதவுகள் அகலத் திறந்து அவளை வரவேற்றன. மனச் சமாதானத்துடன் அவள் நீண்டநாள் ஆசித்திருந்த இறைவனின் இல்லத்திற் காலடிவைத்தாள்.

கோலோங் கார்மேல் சபைக் கன்னியர்மடம் 1894-ல் தாபிக்கப்பட்டது. 1944இல் உலக மகாயுத்தத்தின்போது குண்டு வீச்சுக்களினுல் முற்றுக அழிக்கப்பட்டு, பின்னர் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. ஈடித் அந்த மடத்திற் சேர்ந்தபோது பாடகர்களான 17 அருட்சகோதரிகளும், இரு நவசந்நியாசிகளும், துறவு நிலை அடையக் காத்திருந்தவர் ஒருவரும் அங்கிருந்தனர். அப்பொழுது மடத்தின் துணைத் தலைவியாயிருந்த பின்னர் மடத்தின் சிரேஷ்டரான அருட்சகோதரி தூய ஆவியின் திரேசியா தாயார் அவர்களே, பின்னர் ஈடித்தின் வாழ்க்கை வரலாற்றை எழுதினுர் என்று அறியப்படுகிறது.

அவளது வாழ்க்கைக் குறிப்புக்களில் உள்ளது போல இறைவன் அவளுக்கு அருளிய காட்சி ஒன்றிலே சிலுவையைக் காட்டினுர். அளது சொந்த மக்கள் (யூத மக்கள்) அச்சிலுவையின் கீழ், துன்புறுவதை அக் காட்சியிலே அவள் காணக்கூடியதாயிருந்தது. அதேசிலுவையில் அவளுக்குரிய பங்கை ஏற்க வேண்டுமென இறைமகன் இயேசு அக்காட்சியில் அவளிடம் கேட்டுக் கொண்டார். அவளும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்தப் பெரும் தியாகத்திற்குத் துணிவுடன் தன்னை முற்றும் முழுதாக அர்ப்பணித்தாள்.

தேவ செம்மறியின் பலியிலே பங்கேற்கும்படி இறைவன் அவளைத் தெரிந்து கொண்டார். இறைமகன் இயேசுவில் நிலை பெற்று உறுதிப்படும் வழிமுறைகளையும் இறைவனே முன்னேற்பாடு செய்திருந்தது மிக்க கொடூரமான மரணத்தை ஏற்குமளவுக்கு அவளுக்குத் திடசித்தத்தையும் கொடுத்தார்.

தன்னல மறுப்பை ஏற்று மௌனமாகப் போராடுகின்ற போர்க்களம் கார்மேல் சபையின் துறவிகளது அறை. தினம் தினம் அவள் தன்னை நேசியாது தன் இயல்புகள் இறை அருளினுல் நிரப்பப்பட்டு, இறைவனுக்குச் சேவை செய்வதற்கென்றே படைக்கப்பட்ட, தன் ஆன்மாவை அவருடன் ஐக்கியப்படுத்தும்வரை ஓய்வின்றித் தன்னை வருத்திக் கொண்டிருப்பாள்.

நாடறிந்த பேச்சாளர், மெய்யியல் மேதை இப்பொழுது அந்தக்கார்மேல் சபையில் இருந்த துறவற சகோதரிகள் இருபதுபேரில் ஒருத்தியாகினுள். அந்தப் புதிய குடும்பத்தில் மிக அமைதியுடனும், சிரித்து மகிழ்ந்து மேலும் மேலும் இளமை அடைவது போன்ற புத்துணர்வுடன் விளங்கினுள்.

1934ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் நாளில் கார்மேல்சபை சன்னியாச உடை ஈடித்துக்கு வழங்கப்பட்டது. அன்று முதல் திருச்சிலுவையின் திரேசியா பெனடிக்ரா என்னும் துறவறப் பெயர் சூட்டப்பட்டது. இந்த மகிழ்ச்சியான தினத்திலே அவளது முன்னைய ஆசிரிய நண்பர்களும், உடன் மாணவியரும்,

(தொடரும்)

# மரியாளின் ஆண்டு 1987—1988

**22-08-87 அரசியான புனித கன்னிமரியாள்**



நித்தியமாய் நிர்மலமாய் நிலவுமீசன்
நிறைமதியாய் உருவான புனிதராணி
புத்திமன வாக்கினுக்கும் எட்டா ஞானப்
பூரணத்தின் பூரணமாய்ப் பொலியும் தேவி
சத்தியத்தின் தூயகனி கருணை பொங்கும்
சாகரமாய் ஈடேற்ற வழியாய் வந்து
முத்திநெறி அருளியதாய் மகுடந்தாங்கி
மூவுலகும் ஆண்டருளும் அரசியாளுள்

# பிதா போல் கஸ்பஸ் அளித்த பேட்டி

கேள்வி:- இலங்கையின் இனப் பிரச்சனையின் மட்டிற் கத்தோலிக்க திருச்சபை எடுத்திருக்க வேண்டிய நிலைப்பாடு என்ன?

அவர்களிற் கிறிஸ்தவர்களாயிருப்பவர்களது எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி



யத்தையும் தொடங்கு முன் காவல் தூதருடையவும், பாது காவலர்களான புனிதர்களுடையவும் உதவியை நாடுவார்.

ஆகஸ்டு 21.
புனித பத்தாம் பத்திநாதர் — பாப்பு (1831 — 1915)
1835ஆம் ஆண்டு

கேள்வி:- இலங்கையின் இனப் பிரச்சனையின் மட்டிற் கத்தோலிக்க திருச்சபை எடுத்திருக்க வேண்டிய நிலைப்பாடு என்ன?

பதில்:- உலகெங்கும் இல்லாதவாறு இலங்கையில் மட்டுமே உலகின் நாலு பெரும் மதங்கள், அவற்றின் பூர்வீகத் தன்மை திரிபுபடாது இருக்கின்றன. இலங்கையிலோ இரு பெரும் இனங்கள் உள்ளன. இந்த இரண்டு இனங்களையும் இணைக்கிற பாலமாகக் கிறிஸ்தவம் மட்டுமே விளங்குகிறது. எனவே, இரண்டு இனங்களையும் ஒன்றாகப் புரிந்துணர்வுடனும் சமரசத்துடனும் வாழக் கிறிஸ்தவம் மட்டுமே உழைக்க முடியும். அதுவே உழைக்கவும் வேண்டியது. ஆனால், அது தன் கடமையில் தவறி, பிளவுபட்டு நிற்கின்றது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

கேள்வி:- சமாதானத்தை ஏற்படுத்த முயலும் ஏதாவது இயக்கங்கள் தென் பகுதியிலும் இருக்கின்றனவா?

பதில்:- தென்னிலங்கையிலும் சமாதானத்திற்காக உழைக்கும் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களிற் கிறிஸ்தவர்களாயிருப்பவர்களது எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிட முடியும். மிகக் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இருபகுதியிலிருந்தும், அறிவாற்றல் மிக்கவர்கள் சமாதான சகவாழ்விற்காக வேலை செய்ய முன் வருகிறார்களில்லை.

கேள்வி:- வட இலங்கைத் திருச்சபையைப் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?

பதில்:- யாழ்ப்பாணத் திருச்சபையிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை. இங்கே மிக மோசமாக வர்க்க வேறுபாடுகளும், சாதி வேற்றுமைகளும், சீதனமுறையும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவற்றிற்கெதிராக உழைக்கிற குருக்களை நாம் காண்பது அரிது.

மலையகத் தமிழர்மட்டில், யாழ்ப்பாணத்தவர் கடந்த காலங்களிற் கொண்டிருந்த பற்றும் அவ்வளவு ஆரோக்கியமானதாக இருக்கவில்லை.

நன்றி: வழிகாட்டி




ஆகஸ்ட்டு 19

புனித எஷதஸ் அருளப்பர்
*(1601 — 1680)*

பிரான்ஸ் நாட்டில் நார்மண்டியில் பிறந்த இவர் துறவற சபை ஒன்றிற் சேர்ந்து 24வது பராயத்திற் குருப்பட்டம் பெற்றார். 1643ஆம் ஆண்டில் ஞானவாழ்வு சிறத்தோங்கச் செய்யவும், ஞான ஒடுக்கம் கொடுக்கவும் ''யேசுமரி'' என்னும் பெயர் கொண்ட ஒரு துறவறச் சபையை ஏற்படுத்தினார். பிற்காலத்தில் ''நல்லாயன் கன்னியர்'' சபையைப் பெண்களுக்கு ஏற்படுத்தினார். மாதாவின் மாசற்ற இருதயப் பக்தியை ஆரம்பித்து வைத்தவரும், பரப்பியவரும் இவர்தான். இவர் எந்த ஒரு காரியத்தையும் தொடங்கு முன் காவல் தூதருடையவும், பாதுகாவலர்களான புனிதர்களுடையவும் உதவியை நாடுவார். அதை நாமும் பின்பற்ற முயலுவோமாக.

ஆகஸ்ட்டு 20

புனித பெர்னார்து – மடாதிபர்; மறைவல்லுநர். *(1091–1153)*

"12ஆம் நூற்றாண்டின் மனிதர்'' என்று அழைக்கப்படும் இவர். 1111 ஆம் ஆண்டில் துறவறத்தில் ஈடுபட்டார். இவர் ஒரு சிறந்த மறைப் பேச்சாளர், மறை நூல் அறிஞர். அருந்தவத்தாலும் நெடும்பயணத்தாலும் நோய்வாய்ப் பட்டுத் தமது 63வது வயதிற் காலமானார். இவர் தமது வாழ்க்கையில் ஆபத்திலும் தெளிவற்ற நிலையிலும், இடுக்கண் வேளையிலும் மரியை நினைத்துக் கொள்வார். அவளது மன்றாட்டை உறுதியாகப் பெற அவள்காட்டிய வழியைப் பின்பற்றுவார். மரியாளின் ஆண்டாகிய இக்காலத்தில் நாமும் இப் புனிதரைப் பின்பற்றமுயலுவோமாக.

ஆகஸ்டு 21.

புனித பத்தாம் பத்திநாதர் — பாப்பு *(1831 — 1915)*

1835ஆம் ஆண்டு கடின உழைப்பாளிகளான பெற்றோரிடம் இத்தாலி நாட்டில் ரீயோல் நகரிற் பிறந்தார். 1858ஆம் ஆண்டு குருப் பட்டம் பெற்றார். 1884 ஆம் ஆண்டு ஆயராக நியமனம் பெற்றார். 13ஆம் சிங்கராயர் இறந்த பின் இவர் பாப்பரசராகத் தெரிந்து கொள்ளப்பட்டார். அருள் வாழ்வு நிலையில் இருக்கும் அனைவரும் நாள்தோறும் திவ்விய நன்மை பெறலாம் என்று உத்தரவளித்தார். 1914 ஆம் ஆண்டு 79 வது வயதில் முதல் உலகப் போர் மூண்ட அதிர்ச்சியில் மரணமானார். ''திவ்விய நற்கருணையின் பாப்பரசர்'' என்று புகழப்படுபவர், நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி திருப்பந்தியிற் பங்கு கொள்ள ஆர்வமுடன் இருப்போம்.

அ. றொபேட்.
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை.

## வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# எம்கருத்து

## இன ஒற்றுமை யாரைப் பாதிக்கிறது?

இலங்கையில் நிலவிய இனப்பிரச்சினையைத் தீர்க்க வல்லவர்கள் கிறிஸ்தவர்களே என்ற கருத்துப் பலராலும் அண்மைக்காலங்களில் முன்வைக்கப்பட்டது.

இந்துக்கள் எல்லோரும் தமிழர்கள். பௌத்தர் எல்லோரும் சிங்களவர்கள். இஸ்லாமியர் பெரும்பாலும் தமிழர்கள். இவர்கள் வாணிபத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தபடியால், தேவைக்கேற்பத் தம் தாய்மொழியை மாற்றிக்கொண்டனர். மொழிப்பற்றுடைய ஈரினத்தவர்களையும் தன்னகத்துட்கொண்ட ஒரே மதம் கிறிஸ்தவ மதமாக இருக்கிறது. எனவே, கிறிஸ்தவர்களே இனங்களை இணைக்கும் பாலமாகப் பணிபுரிய முடியும், பணிபுரிய வேண்டும் எனப் பலரும் கருதி வந்தனர். ஆனால், இது தவறானது எனத் தற்போது எண்ணத் தோன்றுகிறது.

"பெரும்பான்மை இனப் பௌத்தர்களும், அவர்களது மதத் தலைவர்களும் தமிழர் உரிமைகளை மதிக்கின்ற இனப்பிரச்சினைத்தீர்வை வரும்பமாட்டார்கள். உலகில, இலங்கையல் மட்டும் சிங்கள இனம் வாழ்வதால், இத்தீவு சிங்கள இனததின அழிவாக அமையும்'' என இவர்கள் கருதுவதாக அரசியல் வாதிகளே கூறி வந்தார்கள்.

அதிஉத்தமனுர் தற்போது முயல்வதுபோல உண்மையான நலன்கள் இவர்களுக்கு விளக்கப்படும் பட்சத்தில், உள்நாட்டிலேயே பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாகக் கிறிஸ்தவர்களைவிட, இவர்களே தீர்வுக்கு முன்னின்று உழைத்து, அதனைச் சாத்தியமாக்கியிருப்பார்கள். இதுவரை ஏற்பட்ட அழிவுகள், உயிர் இழப்புக்கள் அனைத்திலுமிருந்து நமது நாட்டு மக்களைக் காப்பற்றியிருப்பார்கள்.

இன்று இந்திய ஆதிக்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம், இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவந்த இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்துள்ளது. இதன் விளைவாக எழவுள்ள இனங்களுக்கிடையேயான ஒற்றுமை யாரைப் பெரிதும் பாதிக்கவிருக்கிறது?

இனிமேல் அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. அரச கருமமெல்லாம் தமிழிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்பது ஒரு பிரச்சினையா? இல்லவேயில்லை. இனிமேல், வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும். அதிகாரப்பரவலாக்கல் மூலம் தொழில் புரியச் சந்தர்ப்பங்கள் பெருகும்.

தொலைக்காட்சியில் தமிழருக்கும் சமமான இடம் கொடுக்கவேண்டும். எனவே, சிங்கள ஒளிபரப்புக்கள் குறைந்துவிடும். சிங்களவர்கள் இதனுல் பாதிக்கப்படுவார்கள் என்றபிரச்சினையா? அதுவுமில்லை. தமிழுக்கு என்று ஒரு வானொலிச்சேவை இருப்பது போல, தொலைக்காட்சிச்சேவையும் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் இனமும் தன் கலாசாரத்தை வளர்க்கும் சந்தர்ப்பம் பெருகும். மாநில சேவைகள் ஆரம்பமாகும்.

அரசியல் மேடைகள் தவிர, ஈரினமும் கூடும் அன்றாடச் சூழல் எது? ஆட்சி ஒழுங்காக இருந்தால் அரசியலைப்பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள். எனவே, ஈரினமும் உரிமையோடு கூடும் அன்றாடச் சூழல் வழிபாட்டிடமல்லவா? இதில் இந்துக்கள் பௌத்தர்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், நகர்ப்புறக் கிறிஸ்தவர்களோ பெரும் பிரச்சினையை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றனர்.

இதனைப் பிரச்சினையாக எண்ணித் தீர்வை எதிர்ப்பவர்கள் இவர்களே. படிப்பறிவற்ற பௌத்தர்களைக் கூடப் புரியவைக்கமுடியும். ஆனால், எம்மவர்கள், புத்திஜீவிகள் இதனை இன்று ஜீரணிக்க மறுக்கின்றனர்.

ஒரு மனிதனின் மொழியுரிமை அவனது பிறப்புரிமை. எனவே, தன் சுயமொழியில் வழிபாடுகளிற் பங்குகொள்ளச் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுப்பது தலையாய கடமை. இங்கும் அங்கும் இதுநடைபெறுமா?

இவ்வாறு இருமொழிகளுக்கும் சம உரிமை வழங்கப்படும் இடங்களில் இனங்களுக்கிடையே ஒற்றுமை யாரைப் பெரிதும் பாதிக்கின்றது என்பது புலனாகும்.

**"உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு"**

# மறைப் பணியிலும் சேவையிலும் குருக்கள் பொதுநிலையினரின் பங்கு

**1986ஆம் ஆண்டு வைகாசி மாதம் பெங்களூரில் நடைபெற்ற ஆசிய ஆயர் குழுவின் "பொதுநிலையினரின் அமைப்பு" பற்றிய கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாகச் சமுகமளித்த வண. S. J. இம்மானுவேல் அடிகளார் ஆற்றிய தலைமை உரை.** தமிழாக்கம்! அருட்சகோதரி இ. பொனவென்சர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளர்கள் (குருக்கள்) அரசியல் சக்திகளின் வட்டத்திற்குள் நிற்பார்களானால் (தந்திரமான முறைகளில் ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் காரணத்திற்காகச் செயற்பட்டாலும் கூட), நிச்சயமாக தமது மக்களிருந்து தூரவே போய்விடுவார்கள். எனவே, கண்டிப்பும் ஒத்துழைப்பும் கலந்த இடைவெளியை அரசாங்கங்களுடன் வைத்துக் கொள்வது குருக்களுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுவது நிச்சயம். வரலாறு கற்றுத்தந்த பாடம் இது. இத்தவறான சலுகைப் பரிமாற்றத்திற்கு அல்லது போலியான உறவிற்கு பிழையான மாற்று மருந்துகளும் உள்ளன. அதாவது, திருச்சபையை உலகிலிருந்து முற்றாகப் பிரித்து குருக்களை "சக்றிஸ்ரிக்குள்" எல்லைப்படுத்திவிடுவது; பொது நிலையினரை உலகிலிருந்து பின்வாங்கச் செய்துவிடுவது. இந்நிலையில் குருக்களும் அவர்களின் செல்வாக்கிற்குட்பட்ட பொதுநிலையையும், உலகில் ஆற்றப்படும் பொதுநிலையினரின் பணியையும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பை நல்கக்கூடியதாக ஆக்க வேண்டும். இறையரசைக் கட்டியெழுப்பும் ஒரே அலுவலிற் பல்வேறு வழிகளில் உழைப்பதற்கு ஊக்கமும், உதவியும அளிக்க வேண்டும்.

ஒத்துழைப்பிற்குதவக்கூடிய அமைப்புக்கள் (Structures for Collaboration)

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் போது திருச்சபையியலில் வல்லுனர்களான Congar, Rahner, Kung போன்றோரின்

## குருக்கள் அரசியற் சக்திகளின் வட்டத்திற்குள் நிற்பார்களானுல் தமது மக்களிலிருந்து பிரிந்துபோய்விடுவர்

குருக்கள், பொதுநிலையினர் தலைவர்களில் தங்கியுள்ளது. இக்கொள்கை அவர்களது சுய ஆட்சி உரிமையைச் சுதந்திரமான இயல்பை எதுவிதத்திலும் பாதிக்காததாகவும், "ஒன்றிணைக்கும் நோக்கினைக் கொண்ட குருக்கள்—பொதுநிலையினர் என்னும்வேறுபாட்டிற்கு" மதிப்பளிப்பதாகவும் இருக்க வேண்டும். (L. G. 32 d). இதே வேளையில் நாட்டில் அரசியல், சமூக வாழ்வில் ஆழமான ஈடுபாடு கொள்கின்ற பொதுநிலையினர் குருக்களுடனே, திருச்சபையின் ஏனைய தலைமைத்துவத்துடனே அளவுக்கு மிஞ்சிய யினரும் 'நத்தை' போலத் தமக்குள்ளே முடங்கிவிடுகின்றனர் என்பதை 2ஆம் வத்திக்கான் சங்கம் உணர்ந்தது. எனவே, உலகியற் போக்கு, சடப்பொருள் வாதம், கடவுள் மறுப்புக் கொள்கை என்பவற்றினுல் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை சங்கம் கண்டிக்கின்ற அதே வேளையில்(L G 16d, G S 20, 21) திருச்சபைக்கும் உலகிற்கும் இடையே நிலவ வேண்டிய பரஸ்பர உறவையும், திருச்சபை உலகிற்கு அளிக்கக்கூடிய இன்றியமையாத உதவியையும் பற்றி அழுத்திக்கூற முயற்சிக்கிறது (GS 20, 21) GS 40) முயற்சிகள், திருச்சபையின் ஆட்சியமைப்பு, ஐக்கியம் என்னும்கருத்துக்களை இணைப்பதாக இருந்தன இதன் விளைவாக, திருச்சபை நன்கு வரையறுக்கப்பட்டது. அதாவது மறைவட்டங்களில் அடிப்படை இயல்புகளான ஐக்கியம், கூட்டொருமை (Hierarehical Communion, Collegiality) என்பனவற்றைத் திருச்சபை கொண்டிருக்க வேண்டும், கூட்டொருமையை மறைவட்டங்களுக்குமட்டும் உரியதாக ஆக்காமல், சகல மட்டங்களிலும் திருச்சபையின் ஐக்கியத்தைப் பேணும் கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும்

## போலியான உறவுகளாற் குருக்களுக்கும் மக்களுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுகிறது

தொடர்புகளை வைத்திருத்தல் கூடாது. தமது சொந்த புண்ணியம், அருங்கொடை, சக்தி, துணிவு கொண்டவர்களாக, கிறிஸ்தவ மனச்சான்றுடன் செயற்படுதல் வேண்டும். இவ்வாறு ஈடுபடும் பொழுது 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் மனப்பான்மையோடும், படிப்பினைகளோடும நாம் நேர்மையாக முன்னேறிச் செல்கிறோம். மேற்குறிப்பிட்ட பழைய சோதனைகளை அகற்றிவிடுகிறோம். பழைய தொடர்புகளுக்குப் பதிலாக நமது காலத்திற்கும், இடத்திற்கும பொருத்தமான வகையில் குருக்கள—பொதுநிலையினர் பங்களிப்பை வளர்க்கத் துணை புரிகிறோம்.

"தெய்வீக திட்டத்திற்கமைய மனித இனத்தை ஒழுங்குபடுத்தி ஒன்றிணைப்பதற்கு உதவக்கூடிய ஒளியாக, பலமாக விளங்குகின்ற திருச்சபையின் அலுவல் ஊக்குவிக்கப்படுகின்றது"(G S 42)

எனவே, இவை இரண்டிற்குமிடையே அந்நியோன்னிய உறவு நிலவுவது அவசியம். ஏனென்றால், திருச்சபை வேறுபட்டிருந்தாலும் உலகிலிருந்து பிரிந்திருப்பதுமில்லை உலகிற்குப் புறம்பாக இருப்பதும் இல்லை.

திருச்சபைக்கும் உலகிற்கும் இடையே நிலவ வேண்டிய உறவின் இன்றியமையாத்தன்மையை உணருவது திருச்சபைத் தலைவர்களின் பொறுப் என 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிற்பட்ட அனுபவம் கூறுகின்றது. எனவே, திருச்சபையின் உறுப்பினர்களான குருக்களும், பொதுநிலையினரும் அந்நியோன்னிய உறவோடும், பொதுவான பொறுப்புணர்வோடும் நம்பிக்கை, உடன் ஒத்துழைப்பு என்பவற்றை வளர்க்கக்கூடிய அமைப்புக்களைத் தேடவேண்டும். உண்மையான ஒத்துழைப்பிற்கு இவை அவசியம்தேவை. 'அதிகாரப் பங்கீடு' என்னும் கொள்கை principle of subsidiarity—(முன்னர் திருச்சபையினுல் ஊக்குவிக்கப்பட்டும், 1985 ஆயர் மன்றத்தில் கேள்விக்குரிய ஒன்றாக மாறிய கொள்கை) சகல மானிட தொடர்புகளினுலும், ஒத்துழைப்பு

## இறையரசைக் கட்டி எழுப்பும் ஒரே அலுவலில் குருக்களும், பொதுநிலையினரும் உழைக்க வேண்டும்

19 திருச்சபை உலகம் என்னும் எதிரான தன்மையை நோக்காது, திருச்சபை—உலகம் என்னும் உறவை நோக்கிச்செல்லல் (Going for a church-world relationship rather than for a church-world opposition):

குருக்கள் உலகிற் சக்திகளோடு போலியான உறவுகளை வைத்துக் கொண்டு நடப்பார்களானுல், மக்களுக்கும் பாகும். பொதுநிலையினர்-சமூக-அரசியல் பொருளாதார, கலாசார, மெய்ம்மைகளில் இறையரசைக் கட்டியெழுப்பவும், இத்தகைய ஈடுபாடுகளில் உள்ள கிறிஸ்தவ, அப்போஸ்தலிக்க, ஆன்மீக பெறுமதிகளைப் பாராட்டவும் உற்சாகம் அளிக்க வேண்டும். திருச்சபையில் ஆற்றப்படும் குருக்களின் பணி களினுலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். குருக்கள்—பொதுநிலையினர் ஒத்துழைப்பிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நிர்வாகத்திற்காகவும், அப்போஸ்தலத்துவத்திற்காகவும் நிறுவப்படும் பங்குச் சபைகளும் ஏனைய பொதுநிலையினர் இயக்கங்களும் கூடிய அதிகாரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

(தொடரும்)

# எமது வழி என்ன?

எமது சமூக அமைப்பைப் பற்றி அறிந்த நாம் அதனை நல்லமுறையில் மாற்றியமைப்பதற்கான வழி வகைகளை ஆராயவேண்டும். எல்லா மக்களும் சுதந்திரமாக வாழ வேண்டும். யாவரும் ஒருவரிலொருவர் அன்புறவு கொண்டிருத்தல் வேண்டும். யாவர் மத்தியிலும் நீதி காணப்பட வேண்டும். இவற்றை அறிவிக்க, செயற்படுத்த நாம் புறப்படுவோம். கிறிஸ்துநாதர் சமூக அநீதிகளைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கவில்லை மாறாக, குரல் கொடுத்தார்; ஒரு விடுதலை வீரனாக மாறினார். மக்களின் சமூக அநீதிகளை முறியடிக்கும் சில வழிமுறைகளை நோக்குவோம்.

1. முதலில் நம்பிக்கை வேண்டும். இன்றைய சமச்சீரற்ற சூழ்நிலையை மாற்றியமைக்க முடியும், மாற்றியமைக்கவேண்டும். மாற்றியமைக்கப்படும் என்ற உறுதியாக நம்பி, அந்த நம்பிக்கையைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். இந்த நம்பிக்கையின் அறிகுறியாகவும் சாட்சியாகவும் இருத்தல் வேண்டும். இன்றைய நிலை மோசமானது. நாம் ஒன்றும் செய்ய இயலாதவர்கள் என்ற பல்லவி பாடிப் பயனில்லை.

2. எமது சமுதாயத்தின் உண்மை நிலைபற்றியும் அதிலுள்ள சிக்கல்கள் பற்றியும் சரியான அறிவு கொண்டிருத்தல் வேண்டும்.

3. தனிப்பட்ட நபரின் வாழ்வில், குடும்பத்தில், நிறுவனத்தில் ஆதிக்கம், அதிகாரம், ஒடுக்குதல், அநீதி இவற்றைக் கண்டறிந்து குடும்ப உணர்வு வளரவும் ஒடுக்கப்பட்டோருக்கு நீதியும் விடுதலையும் வழங்கவும் பாடுபடல்வேண்டும்.

4. யார் என்ன சொல்கிறார்? எதற்காக அவ்வாறு சொல்கிறார்? அதனால் நன்மையடைபவர் யார்? எல்லாவற்றிலும் இறுதிநோக்கம் என்ன? என்று ஆய்வுக் கண்ணோட்டத்தோடு எப்போதும் சோதித்துப் பார்த்தல் வேண்டும்.

5. நீதி நிலவ ஜெபிப்பதும் வழிபாடுகள் நடாத்துவதும் போதாது, மாறாக, ஏழைகள், துன்புறுவோர் சார்பாகக் கரிசனையோடு, தாராள மனப்பான்மையோடும் உற்சாகத்தோடும் உழைத்தல் வேண்டும்.

6. நாம் நம்பத் தகுந்தவர்கள் என்பதன் அடையாளம் அபாயம் நிறைந்த தீர்மானங்களை எடுக்கும் துணிச்சல் எமக்கு இருக்கிறது என்பதேயாகும். பாதுகாப்பற்ற நிலைக்கு அது எம்மை இட்டுச் செல்லலாம். பயமாய் இருக்கின்றதா?

7. தலைவிதி மீது பழியைப் போட்டுவிட்டு, செயலற்றிருக்கும் நிலையை எதிர்த்து, ஈடுபாடற்ற நிலையை மாற்றி, பொறுப்புணர்ச்சியோடு மனித சமுதாயத்தைத் தட்டி எழுப்பப் பாடுபடவேண்டும்.

மேற்கூறிய வழிமுறைகள் எமது நாளாந்த வாழ்வின் செயன் முறைகளாக மாறட்டும். அப்போஸ்தலராகிய புனித சின்னப்பர் கூறுவது போல, நான் இட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; இறைவனே விளையச் செய்தார். எனவே, முதலில் எமது பங்கை நாம் செயற்படுத்த முனைவோம்.

நீற்ரு செல்லையா

---

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
14-08-87




அன்பு இளம் உள்ளங்களுக்கு

இம்முறை, பல அன்பு நெஞ்சங்களுக்குத் தொல்லைதரும் பொதுவான நோய்-தடிமன் பற்றிக் கூற விரும்புகிறேன்.

தும்முதல், கண் கலங்குதல், தொண்டை கரகரத்தல், மூக்கால் நீர்வடிதல், போன்றன தடிமனோடு தொடர்புடைய வெளிப்பாடுகளாகும். போசாக்கின்மை, மனச் சலிப்பு, சுகாதார வசதிகள் குறைந்த காற்றோட்டமில்லாத அறையில் வசித்தல் போன்றன இவ்வியாதிக்குக் காரணமாக அமையலாம்.

டாக்டர் கவால்ற்னி (Dr. Gwaltney), டாக்டர் கென்லி (Dr. Hendley) என்போரது மருத்துவ ஆராய்ச்சியின்படி, கையோடு கை சேருவதே தடிமன் பரவுதற்கு மிகவும் சாதகமாகவுள்ள ஊடகமாகும். இவர்களது கண்டுபிடிப்பின்படி, தடிமன் வைரசுகள் 1 மணித்தியாலம் கைக்குட்டையிலும் 2 மணித்தியாலங்கள் கைகளிலும் 72 மணித்தியாலங்கள் கடின மேற்றளங்களிலும் உயிர் பிழைத்துக் காணப்படும்.

தடைசெய்யும் அல்லது பரவுவதைத் தடுக்கும் வழிகளிற் சில:

★ அடிக்கடி சவர்க்காரம் போட்டுக் கழுவுதல்.
★ மூக்கையோ, கண்களையோ கைகளால் தொடாமல் தவிர்த்துக்கொள்ளல்.
★ போதுமான அளவு ஓய்வு எடுத்துக்கொள்ளல்.
★ சமவலுப் படுத்தப்பட்ட சக்தியான சாப்பாட்டை உண்ணுதல்.
★ கூடுதலான அளவு தண்ணீரைச் (சுடவைத்து ஆறியது) குடித்தல.
★ தொண்டை கரகரக்கிறது எனின் உப்புத்தண்ணீரால் கொப்புளித்தல்.
★ புகைத்தலைத் தடைசெய்தல்.

நலமே வாழ நல்வாழ்த்துக்கள்.

அன்பு நெஞ்சன வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு

அடைக்கலம்: அண்ணை கோவில் நிறம்பிய சனப் இருக்கு. ஆனா சத்தமில்லாப் பிரார்த்தனை நடக்குது பாத்தியாண்ணே.

குருசுமுத்தண்ணை: சத்தமில்லாமல் இருக்கிறது வெக்கத்தில தம்பி, ஆக சுவாமியும் பாட்டுக்கிளாசும் சத்தமோட மற்றவையள் சரியாநடக்குதோ எண்டு பாக்கவெல்லோ வந்திருக்கினம்.

அடைக்கலம்: அப்ப இங்கையும் பார்வையாளர் தானா அண்ணே.

— யோகா

## ஆறு ஆறுதல்கள்

1. அவதூறு சொல்பவன் பசாசுக்குப் பரிந்து பேசுகிறான்.
2. பிறரைத் தூற்றுபவன் பசாசின் வில்லிலிருந்து ஏவப்பட்ட அம்பு
3. ஙெருகும் சிங்கத்தைக் கடிக்காது. ஓநாய் ஓநாயைக் கொல்லாது. அவதூறு சொல்பவன் மாத்திரம் மனிதனைக் கடித்து விழுங்கத் தேடுகிறான்.
4. அவதூறு சொல்பவர்கள் சருவேசுரனுக்கும் மனிதனுக்கும் அருவருப்புக்குரியவர்கள்.
5. அபகரித்த சொத்தை மீண்டும் கொடுத்து விடலாம் அபகரித்த கீர்த்தியைக் கொடுப்பது அசாத்தியம்.
6. பிறரைப் புகழ்ந்து பேசு- அல்லது எதுவும் பேசாதே.

எம் எம் அபூபக்கர்.
மன்னார்.




## குடும்பமே சமுதாயத்தின் அடித்தளம்

சமூகத்தை ஆக்கும், அன்றேல் அழிக்கும் தனிநபரை உருவாக்கி அச்சமூகத்திற்கு அளிப்பது குடும்பமே.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதும் யாவரும் அறிந்ததே. ஏட்டிற் படிப்பதுமட்டும் கலைகள் அல்ல, குடும்பத்திலேயே அநுபவ வாயிலாகப் பல்வித கலைகளையும் பெறுகின்றோம்.

தாயைப்போலப் பிள்ளை
நூலைப்போலச் சேலை
தந்தை எவ்வழி, மைந்தரும் அவ்வழி.

பிள்ளைகள் வாழ்வின் வழிவகை குடும்பத்திலிருந்தே பிறக்கின்றது. நாளும் எடுத்ததற்கெல்லாம் பொய்யும், புளுகும், கூறும் பெற்றோரிடமிருந்து குழந்தை உண்மையை எப்படிக் கற்கமுடியும்? கடன்காரர் தொல்லையால் வீட்டிலிருந்து கொண்டே—இல்லையென்று கூறும்படி தம்பிள்ளைகட்குக் கூறும் பெற்றோர்; பொட்டுக்கால் வந்த கோழியை அடைத்து நாள்கள் பலவாக முட்டைகளை எடுத்துவிட்டுப் பிள்ளைகள் முன் அதனை மறுத்து அறியோம் எனத் தெரிவிக்கும் பெற்றோர்; வருடாவருடம் வேலிக்கதியாலை வெளிப்புறம் தள்ளி, நாளடைவில் தாம் செய்ததை மறுத்து வேலிச்சண்டைக்கு, ஏன் குத்துவெட்டுக்கட்கும் ஆளாகும் பெற்றோர்; சீதனப் பிரச்சினையை விலக்க வழிகோலி ஒன்றுகூடி, உறவு கொண்டாடும் பிள்ளைகட்கு உருக்கொடுத்து உதவிசெய்துவிட்டு ஒன்றுமறியாத பாவிகள் போல் நடிக்கும் பெற்றோர்; தாமே ஒருவர்க்கொருவர் பிரமாணிக்கமின்றி நடந்து அதனை மறைக்கப் பிள்ளைகளைப் பொய்சொல்லச் சாட்சிக்கழைக்கும் பெற்றோர்; எவ்வாறு பிள்ளைகட்கு மெய்ப்பொருளைக் காணும் அறிவைக் கொடுக்க முடியும்? ஒரு முறை மறைக்கல்வி வகுப்புக்குப் பிள்ளைகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். வீட்டினுள் பிள்ளையைவைத்துவிட்டு, அவன் போய்விட்டான், என்ற தாயின் சொல்லையும் நான் நம்பி ஏமாந்ததும் உண்டு. இப்பேர்ப்பட்டோர் மெய்ப்பொருளை எங்ஙனம் காட்ட முடியும்? பிள்ளைகள் செய்யும் பிழைகளைச் சுட்டிக் காட்டுவோரையும் வசைகூறி, எதிர்த்துவிட்டு, அவர்கள் செய்வது பிழையல்ல என்று காரணம் காட்டி நல்லவர்களென அவர்களைத் தட்டிக் கொடுக்கும் பெற்றோர் எங்ஙனம் மெய்ப்பொருளை உணர்த்த முடியும்?

சமுதாயத்தின் தலைவர்கட்குப் பாலுடன் பண்பையும் ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்ப்பது குடும்பத்தின் தொட்டிலில்தான். அதனாற்றான் "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றனர் பெரியோர். குழந்தைகட்கு சத்துணவு, அலங்கார நாகரிக உடை, உறையுள் இவற்றைக் கொடுத்தால்மட்டும் போதாது. தம் இனம், மொழி, கலாசாரம், பண்பாடு, சமயத்துக்குரிய உண்மைகளையும், வாழ்க்கை நெறிகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். முதன் முதலில் தம் உள்ளத்துள் உறையும் உண்மைக் கடவுளைத்தேட, அவரை வழிபட, அவரிலே உண்மையைக் கண்டுகொள்ள, அவருடன் உறவாடக் கற்றுக்கொடுக்க வேண்டும். சிந்தனை, சொல், செயலில் பொய்மையை விலக்க, உண்மையைக் கடைப்பிடிக்க நல்லவற்றையே சிந்திக்க பேச செய்து முடிக்கக் கற்றுகொடுக்க வேண்டும். இல்லத்திலேயே ஆரம்பக்கல்வி இடம் பெறவேண்டும், ஆனால் இன்றைய பெற்றோரே பிள்ளைகளிடம் போலி மதிப்பீடுகளையும், பொய்நியாயங்களையும் கூறி, அவர்களின் மனச்சான்று உருவாக்கத்தின் சுருக்கத்துக்குக் காரணமாகின்றார்கள். 'நம் பிள்ளைகள் நல்லவர்கள்—பிழை செய்யமாட்டார்கள்' என்ற ஒரு போலித்தத்துவத்தால் ஆட்கொள்ளப்பட்டு, பிள்ளைகள் உண்மையைக் காணாது விடவும், உண்மையின் பாதையை ஏற்காது விடவும், உண்மையைத் தேடாது விடவும் சில சமயம் வழிகோலுகின்றனர்.

அன்புப் பெற்றோரே, பெற்றோரான ஆசிரியர்களே, உங்கள் பிள்ளைகள் உண்மை, நேர்மையுடன் வாழ உங்கள் வாழ்வே வழிகோல வேண்டும். உங்கள் வாக்கே மேல்வரிச்சட்டமாக வேண்டும். எம் இளைய தலைமுறை இதில் முன்னேற. இந்த இறையரசின் மதிப்பீடுகளை வாழ உங்கள் உறவு, தொடர்பு, சமூக வாழ்வு இவற்றைச் சீர்செய்ய இறைவன் அழைக்கின்றார் இந்த அழைப்பை உணர்ந்தால் குடும்பம் ஒரு கதம்பம்—அன்றேல் அது ஒரு குதம்பல்

அருட்சோதரி சோபியா (தி. கு.)

# அருள் வாக்கு அறிவோம்

## நீதிபதிகள் ஆகமம் 2

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

1. பொது அமைப்பு.

நீதிபதிகளின் வரலாற்றை ஆராய்கின்ற போது, நாம் அங்கே ஒரு பொது அமைப்பைக் காணலாம்.

1. இஸ்ராயேல் மக்கள் இறைவனின் உடன்படிக்கையை மறந்து பொய்த் தெய்வங்களை வணங்குகிறார்கள்.
2. இறைவன் முன், பாவம் செய்த இவர்கள் மீது, இறைவன் சினம் கொள்கிறார்.
3. எனவே, இறைவன் போரிலே இஸ்ராயேல் மக்களை எதிரிகளின் கைகளிலே ஒப்படைக்கின்றார்.
4. இஸ்ராயேல் மக்கள் பகைவர்களினுற் கொடுமைப்படுத்தப்படும் போது, மனம் திரும்பியவர்களாக இறைவனிடம் ஓடோடி வருகின்றார்கள்.
5. மனம் திருப்பித் தன்னிடம் வந்த தன் மக்கள் மீது மனமிரங்கி இறைவன் நீதிபதி ஒருவரையனுப்புவதன் மூலம், அவர்களை மீட்டு விடுதலையளிக்கின்றார்.
6. விடுதலை பெற்றமக்கள் திரும்பவும் பாவம் செய்கிறார்கள்.

இஸ்ராயேல் மக்கள் பாவம் செய்து மனம் திரும்புகின்ற ஒவ்வொரு வேளையிலும் இறைவன் நீதிபதிகளை அனுப்புவதன் மூலம் அவர்களை விடுவிக்கின்றார். இவ்வாறு, பாவம் — இறைவனின் சினம் — துன்பப்படுத்தல் — மனம்திருப்புதல் — நீதிபதியினூடாக மீட்பு — பாவம்------- என்று ஒரு பொது அமைப்பாக நீதிபதிகள் ஆகமத்தில் அமைவதைக் காணலாம்.

2. இறைவனின் நீதி.

இறைவனின் நீதி இவ்வுலக நீதியைப் போல, பிழை செய்தவர்கள் அனைவரையும் தண்டிக்கும் நீதியன்று. இறைவன் பாவம் செய்தவர்கள் அனைவரையும் தண்டிப்பாராஞல், அவருடைய தண்டனையிலிருந்து ஒருவரும் தப்பமுடியாது. ஏனெனின், நாமனைவருமே பாவிகள். (சங். 129). ஆனல், இறைவனின் நீதியானது அவருடைய இரக்கத்திலும், உடன்படிக்கையின் பற்றுறுதியிலுமே தங்கியுள்ளது. இறைவன் நம் பாவங்கட்கு ஏற்றபடி நம்மைத் தண்டிப்பதில்லை. நாம் மனம்திரும்பி அவரிடம் மீண்டும் செல்வதற்குத் தகுந்த அளவு காலம் நமக்குத் தருகின்றார். மனம் திரும்பி அவரிடம் செல்லும் போது அவர் நம் பாவங்களை மன்னிக்கின்றார். இதுவே இறைவனின் நீதியாகும். இவ்வாறு நம் பாவங்களை மன்னிக்கின்ற இறைவனின் நீதியை நீதிபதிகள் ஆகமம் சிறந்த முறையிற் படம் பிடித்துக் காட்டுகிறது.

சகோ. மனுவேற்பிள்ளை டேவிட்.

# பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

ஆண்டவர் கூப்பிட்டபோது நம் ஆபிரகாமுக்கு - உங்களைப்போல இளமை முறுக்கு இல்லை - முன்பின் யோசியாமற் செயற்படுகிற வயசில்லை, சொத்துக்களைக் கட்டிக் காத்து, அவம் போகக் கூடாதே, என்று எண்ணி யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்து, தன்பெயர் - தலைமுறை, தலைமுறையாக வாழ்த்தப்பட வேண்டும் என்று எண்ணுகிற வயது. அப்போது அவரின் வயது எழுபத்தைந்து.

இந்த வயதிலும அவர் ஆண்டவனை - அவரின் சொல்லை - நம்பினார் - ஏற்றார் - விசுவசித்தார். யோசிப்பதற்கு அவர் காலக்கெடு கொடுக்கவில்லை.

''இதோ புறப்படுகிறேன்'' என்று சொல்லி எல்லாப் பந்தங்களையும் தூக்கி வீசிவிட்டு, கண் காணாத நாட்டுக்கு உடனே புறப்படுகிறார்.

அவர் புறப்படும் பொழுது, தான் மட்டும் போகவில்லை தனது வயது போன மனைவி ''சாராயி'' யையும் கூப்பிடுகிறார். இன்னும் தனது சகோதரனின் மகன் - அதாவது பெருமகன் ''லோத்'' என்பவனையும் கூட்டிக்கொண்டு, தான் வாழ்ந்த ''ஆரான்'' என்ற ஊரை விட்டு ஆண்டவர் கூப்பிட்ட 'கானான் நாட்டுக்குப் போகிறார்.

மருமக்களே, அவரை ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா? நாங்கள் என்றால் இப்படி உடனடியாக முடிவு எடுத்திருக்க மாட்டோம். இல்லையா? ஆனல் அவர் 'இறைவன் செய்வதெல்லாம் நன்மைக்கே'' என்ற முடிவுக்கு வந்தவராய் உடனடியாகச் சம்மதிக்கிறார். இந்த ''லோத்'' எனபவரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் - உங்களுக்குக் கட்டாயம் கூறவேண்டும்.

அது அடுத்த வாரம்.

பொறுமை கேட்கும்
அன்புடன்
பைபிள் மாமா

அறிந்துகொள்ளுங்கள் — 23

## ஆபிரகாமின் போர்

ஆபிரகாம்,தன் தம்பி லோத்தைச் சிறைப்பிடித்துச் சென்ற அரசர்களுடன் போரிட்டுச் சிறைமீட்ட நிகழ்ச்சியை ஆதியாகமம் 14ஆம் அதிகாரத்திற் காண்கிறோம்.

இவ்வதிகாரத்தைப் படிக்கும்போது ஆபிரகாம் பெரிய படைத்தலைவன் போற் பெரிய அரசர்களுடன் போரிட்டு வெற்றிவாகை சூடுகிறார்.

சிலர், இக்கதை நாடுகடத்தப்பட்டபின் விவிலிய பாரம்பரியத்தில், தங்கள் குலத்தரத்தை பெருமைப்படுத்தப் பழைய இலக்கிய நடையில் வீரகாப்பியமாகப் புகுத்தினர் ஆசிரியர் என்பர். வேறு சிலர் இஃது உண்மைப் பழம்வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. ஏனெனில், இங்கு கூறப்பட்டது போன்ற நிகழ்ச்சிகள் மேற்கு ஆசியாவின் அரசியல் நிலைமைகளைக் காட்டுகின்றது என்பர்.

ஆனல், இங்கு கூறப்படும் அரசர்கள் யார் என்பது தெரியவில்லை. இந்நிகழ்ச்சிபற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. கி. மு. 2000–1600-க்கு இடைப்பட்ட காலத்தில் யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள பகுதிகளின் பண்பாட்டு வாழ்க்கை முறை இழிநிலையில் இருந்ததாகப் பிற மூலகங்கள் கூறுகின்றன. கி. மு. 1900 — 1700-க்கு இடையிட்ட காலத்தில் அமேரியரிடமும், வுறிரைட்டுகளிடமும் இன எழுச்சி ஏற்பட்டது. இக்காலத்தில் தான் ஆபிரகாம் கானனிற் குடியேறினர். இவ்வாராய்ச்சிகளின் படி ஆபிரகாம் ஏறக்குறைய கி. மு. 1850-இல் ஏபிரோனில் குடியேறியிருக்க வேண்டும். இங்கு தங்கி இருக்கும்போதுதான் தன் தம்பி சிறைப்படுத்தப்பட்டுக் கொண்டு செல்லப்படுவதைக் கேள்விப்பட்டு, அரசர்களின் படையைத் தாக்கித் தம்பியைச் சிறை மீட்டிருக்க வேண்டும்.

ஆபிரகாம் பெரும் படை திரட்டி, அரசர்கள் படையுடன் போரிட்டு வெற்றி பெற்றிருக்கின்றார் என்றன்று. சண்டையிட்ட அரசபடைகள் முன் செல்ல, கைதிகளையும் கொள்ளைப் பொருள்களையும் பின்னே வரும் பின்புறக்காவற் படை கூட்டிச் செல்லும். ஆபிரகாம் தன் படையுடன் சென்று பின்புறக் காவற்படையைத் தாக்கி (அதிரடித்தாக்குதல்) தன் தம்பியையும், கொள்ளையிட்ட பொருள்களையும் மீட்டார். ஆபிரகாமிடம் பெரும் படை உண்டா என்று கேட்கத் தோன்றுகிறது. ஆபிரகாம் ஒரு நாடோடி. அதாவது, அவர் ஒரு கூட்டத்துக்குத் தலைவர். அவருடைய மந்தை மேய்க்கவும், வேலைகள் செய்யவும் பல அடிமைகளும், வேலையாள்களும், காவற்காரரும் இருந்தனர். எனவே தான், அவர் ஒரு சிறு படையைக் கொண்டு தன் தம்பியைச் சிறைமீட்க முடிந்தது.

இ. ம. ஜெயசீலன்

# காவலன் கண்மணிகள்

தொடர்பு:

காவலன் கண்மணிகள்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
த. பெ. எண்: 2
யாழ்ப்பாணம்

மடல் 28:

அன்பின் கண்மணிகாள்,

இறையேசுவின் ஆசிகள் என்றும் உம்முள் நிறைவதாக.

உள்ளத்தில் ஓர் ஆறுதலும், அமைதியும் தோன்றியிருக்கும் இவ்வேளையில் இறையேசுவுக்கு எம்நன்றியைக் கூறுவோம். கடந்தகாலப் பயங்கர அனுபவங்களை, தியாக வாழ்வுகளைச் சிறிது கண்ணைமூடி நினைத்துப்பாருங்கள். கடந்தவைகளை நினைத்துக் கண்ணீர் சொரிந்து கொண்டு காலம் கடத்துவதோ, கடந்தவைகளை அடியோடு மறந்து அலைந்து திரிந்து வாழ்வதோ வருங்கால வளமான வாழ்வுக்கு வழியாகா, ஐந்து விரல்களும் ஐந்து விதம் என்ற நிலையை விட்டு, ஒரு மனத்தின் ஆணையை ஒருமித்துச் செயற்படுத்தும் ஐந்தும் ஒரு கைவிரல்களாக மாற்றம்பெற வேண்டும்.

கண்மணிகளே, உங்கள்முன் நிற்கும், உங்கள் கல்விக்கூடத்தைக் கண்திறந்து பாருங்கள். அதனை ஆக்கிட என்ன செய்யலாம் என்று நினையுங்கள். கல்விக்கூடத் தளபாடங்களை உடைத்துப் பழக்கப்பட்டவர் இனியாகிலும் அப்பழக்கத்தைக் கைவிடட்டும். கல்விக்கூடத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஒரு மனதாக ஏற்று வாழுவோம் என்ற மன உறுதிப்பாட்டுடன் கல்விக்கூடம் ஏகுங்கள்.

இறையுணர்வுடனும் தமிழுணர்வுடனும்
இன்றும் என்றும் வாழ வாழ்த்தும்

அன்பின்
அன்பு விழி.

அங்கத்துவ விண்ணப்பங்களை அழகாகவும் தெளிவாகவும் நிரப்பி அனுப்புங்கள்.

காவலன் கண்மணிகளின் வளமான வாழ்வுக்கு அங்கத்துவம் அவசியம்.

## கணிதம்:- படிமுறை 2

உரோம இலக்கங்களுக்குரிய இந்து - அராபிய இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| I... 1 | XI...11 | XXX... 30 | CD... 400 |
| II... 2 | XII...12 | XL... 40 | D... 500 |
| III... 3 | XIII 13 | L... 50 | DC... 600 |
| IV... 4 | XIV...14 | LX... 60 | DCC... 700 |
| V... 5 | XV...15 | LXX... 70 | DCCC... 800 |
| VI... 6 | XVI...16 | LXXX... 80 | CM... 900 |
| VII 7 | XVII...17 | XC... 90 | M...1000 |
| VIII... 8 | XVIII 18 | C...100 | MCM...1900 |
| IX... 9 | XIX...19 | CC...200 | MM...2000 |
| X...10 | XX...20 | CCC...300 | MMM...3000 |

தொடர்ச்சி, இதழ் 31இல் வரும்

## ஆத்மீக ஆகாரம்: (உள்ளத்தால் உணரும் பகுதி)

வாழ்க்கை என்பது அன்பெனும் பந்தத்தால் இணைந்த பிரபஞ்ச இயக்கம். ஆகவே, நாம் எங்கும் எதனுடனும் அன்பாற் பிணைக்கப்படவேண்டும். அதில் மகிழ்ச்சி உண்டாகிறது. அன்பிற்கு மறுபெயர்தான் உலகை இயக்கும் சக்தி என்று தோன்றுகிறது.

ஆழ்மனத்தையும் பிரபஞ்ச அறிவையும் திறக்கும் நல்ல திறவு கோல் தியானம் மட்டுமே. பிரார்த்தனை, ஆழ்நிலைத்தியானம, யோகம் இவைஎல்லாம் பத்திரமான திறவுகோல்கள்,

ஆகாரம் பெற்றஇடம்: ஆத்ம தரிசனம்
டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி
பரிமாறியவர்: சசி

# முடிவல்ல ஆரம்பம்

சிறுகதை

பிரகாசத்தின் குடும்பம் அந்தக் கிராமத்திலே மிக வறிய குடும்பமாக இருந்த போதிலும் அவர்கள் மானத்தோடு வாழ்க்கை நடத்தி வந்தனர். பிரகாசம் சிறுவயதிலிருந்தே உழைப்பில் ஆர்வம் உள்ளவர். விவசாயம் செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். அதுமட்டுமன்று தன்னைப் போலத் தன் பிள்ளைகளும் துன்பப்படக் கூடாது. வயலில் இறங்கி வாதைப்படக் கூடாது, படித்தவர்கள் பணக்காரர்கள் முன்னிலையில் தலை குனிந்து வாழாது தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற நல் நோக்கத்துடன் பிள்ளைகளுக்கு கல்வியறிவு ஊட்டத் தவறவில்லை. அவரது நோக்கத்தை நிறைவேற்றுபவள் போலவே மனைவி செங்கமலமும் பிரயாசைப் பட்டாள்.

அவரது மூத்த பெண்கள் இருவரும் O/L வரை படித்துவிட்டு வேலையின்றிக் கல்யாண வயதையும் கடந்து, காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கப் பிரகாசத்துக்கும் மனைவிக்கும் நெஞ்சே வெடித்துவிடும் போன்ற வேதனை. அவர்களுக்கு ஒரு நல்வாழ்வு கிடையாதா என்ற ஏக்கம்.

ஒரு நாள் கல்யாணப் புரோக்கர் கந்தசாமி அவர்கள் வீட்டுக்கு வந்தார். மிகவும் மகிழ்ச்சிகரமாக வரவேற்கப் பட்டார். மூத்த பெண் விமலாவுக்கு ஒரு மாப்பிள்ளை பேசி வந்ததாகவும், அவன் வெளிநாட்டிலிருந்து தற்போது வந்திருப்பதாகவும், சீதனமாக காசு, நகை, வீடுவளவு எல்லாம் கொடுக்கவேண்டும் என ஒரு போடு போட்டார். பாவம் அந்தக் குடும்பம் என்ன செய்யும்? செய்வதறியாது திகைத்தது.

படிப்பு ஒருபுறம், பாசம் இன்னொரு புறம் என்று தனக்குள்ளே போராடிக்கொண்டிருந்த அவளின் தம்பி சேகர் தனக்குள் ஒரு முடிவு எடுத்தான். அதாவது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத் தான் வெளிநாடு சென்று உழைத்து வாழ்வில் முன்னேற்றம் அடையவேண்டும், சகோதரிகளுக்கு நல்லவாழ்வு அமைத்துக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டபோது அவர்களால் மறுக்க முடியவில்லை. ஆனால், அவர்கள் இருக்கும் நிலையில் வெளிநாடு போவதென்றாலும் பணத்துக்கு எங்கே போவது? யாரிடம் போவது?

இவ்வளவையும் உள்ளே நின்று கேட்டுக்கொண்டிருந்த விமலா, இன்னும் பொறுக்க முடியாதவளாக வெளியில் வந்து "அம்மா எனக்குக் கல்யாணமே வேண்டாம். பெண்ணை அன்றி பொன்னையும் பணத்தையும் கேட்கும் இக்காலத்தில் என்னைப் போல ஏழைப்பெண்கள் அதை நினைத்துப் பார்க்கவே முடியாது. கேவலம் ஒரு பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியாத, தன் உழைப்பில் அவளை வாழவைக்க முடியாத, பணத்துக்கு ஆசைப்படும் ஒருவனை மணமுடிப்பதிலும் பார்க்க ஏழையென்றாலும் பண்புள்ளவனை, மனிதத்தன்மை உள்ளவனைச் செய்யலாம்" என உறுதியாகக் கூறிவிட்டாள்.

சேகர் பிடிவாதமாக நின்று வெளியில் சென்று உழைக்க எல்லோரிடமும் சம்மதம் பெற்றுவிட்டான். வேறுவழியில்லாமல் வீட்டை ஈடு வைத்துப் பணம் பெற்றுப் பயணத்துக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. குறித்த நாளும் வரவே கண்ணீருடன் விடைபெற்றான்.

பலதுன்பங்கள் மத்தியில் முயற்சி எடுத்து, சிறிய வேலை ஒன்றிற் சேர்ந்து பணமும் அனுப்பினான். அவர்களது வறுமைநிலை மாறியது. விமலாவும் தனக்குப் பிடித்த நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டாள். அதேபோல அமலாவும் தான் காதலித்தவனையே கைப்பிடித்தாள். சேகரின் தம்பியும் படிப்பைத் தொடர்ந்து பல்கலைக் கழகம் போகிற அளவு தேர்ச்சியடைந்தான்.

அவர்களது குடும்பப்படகு சந்தோஷம் எனும் கடலிற் சீராகப் போய்க்கொண்டிருந்த வேளை, அதைக் கலைப்பதற்கே வந்ததுபோன்று திடீரென்று ஒருநாள் இராணுவக் கூலிப் படைகள் அக்கிராமத்தில் நுழைந்தன. குழந்தைகள் பயத்தால் கூக்குரலிட்டன. பெண்கள் தம் பெண்மை பறிபோய்விடுமோ என நடுங்கினர். வயோதிபர் வகைதெரியாது தவித்தனர். வாலிபர்கள் செய்வதறியாது திகைத்தனர். அவ்வேளையில் அவர்களிடமிருந்து வந்த அறிவித்தல் பனையால் விழுந்தவனை மாடேறி உழக்கினது போல இருந்தது. அதாவது 15—35 வயதுக்குட்பட்ட ஆண்கள் அனைவரும் தம் அடையாள அட்டையுடன் வந்து குறிப்பிட்ட இடத்தில் நிற்கும்படியும், விசாரணைக்குட்படுத்திவிட்டு சிறிது நேரத்தில் விடுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

எனவே, அதை நம்பி, சேகரின் தம்பி குமாரும் அடையாளஅட்டையுடன் சென்றான். சென்றவன் சென்றது தான், திரும்பி வரவேயில்லை. உடனே விடுவதாகக் கூறியவர்கள் எல்லா இளைஞர்களையும் வாகனங்களில் ஏற்றி முகாமுக்குக் கொண்டு சென்றனர். பிள்ளைகளை இழந்த தாய்மாரும், கணவனைப் பறிகொடுத்த மனைவிமாரும், உடன் பிறப்புக்களைப் பிரிந்த சகோதரிமாரும் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற அக்கிராமத்தைப் பார்க்கவே சகிக்க முடியவில்லை. பத்து மாதம் சுமந்து, பெற்று வளர்த்து, பாராட்டி, சீராட்டி, கண்ணை இமை காப்பதுபோற் காத்த தம் பிள்ளைகளுக்கு இக்கதியா ஏற்பட வேண்டும்? இது காலம் செய்த கோலமா? அல்லது கடவுள் இட்ட தண்டனையா? என்னவென்று சொல்வது.

பெற்றோர் தம் பிள்ளைகளை வெளியே கொண்டுவர எத்தனையோ முயற்சி எடுத்தும் எவ்வித பலனும் இல்லை. ஒரு நாள் தற்செயலாக முகாமிலிருந்து விடுபட்ட இளைஞன் கூறியவற்றைக் கேட்ட பிரகாசத்தின் குடும்பம் கதிகலங்கிப் போயிற்று அங்கு நடைபெற்ற சித்திரவதைகள் தாங்காத குமார் இறந்துவிட்டான் என்பதே அது. செத்த உடலுக்காகச் சாகப்போகும் உடல்கள் கதறின. கண்ணீர் உகுத்தன.

இந்த இழப்பைத் தாங்காத செங்கமலம் படுத்த படுக்கையாகி நிரந்தரமாகக் கண்ணை மூடிவிட்டாள். இந்த அவலச் செய்திகள் சேகருக்கு அறிவிக்கப் பட்டது. தன் குடும்பத்தின் சோகக்கதையை நினைத்துக் கண்ணீர்விட்டான் என்றாலும் அவனுக்குள் இருந்த மன உறுதியும் வைராக்கியமும் குறையவில்லை. தந்தைக்கும் சகோதரிகளுக்கும் ஆறுதல் வார்த்தைகளால் எதிர்கால வாழ்விற்கு நம்பிக்கையூட்டினான்.

2 வருடங்களின் பின் சேகர் நாடுதிரும்பினான். பூஞ்சோலையாக இருந்த கிராமம் பாலைவனமாக மாறியதைப் பார்க்க அவனால் சகிக்க முடியவில்லை. இழந்த உடைமைகளை ஒவ்வொன்றாகத் தேடினான். இழந்த உயிர்களை அவனால் தேட முடியுமா? "எமக்கு எத்தனை கஷ்டங்கள், கவலைகள், இழப்புக்கள். பிரிவுகள் வந்தபோதும் நாம் ஆண்டவனில் உள்ள நம்பிக்கையில் நிலைதளராமல் இருந்தால் எமக்கு ஒரு விடிவு காலம் பிறக்கும், வாழ்வில் எதற்கும் பின்வாங்காமல் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக வாழ்வோம்" என்ற தம்பியின் தத்துவத்தைக் கேட்ட சகோதரிகளும் தம் கணவன்மார் எப்போதாவது ஒருநாள் வருவார்கள், நாமும் நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழலாம் எனும் எதிர்பார்ப்புடன் வாழ்க்கைப் போராட்டத்தை தொடர்கின்றனர். வாழ்க்கை வாழ்வதற்கே.

டெலஸ்ரீனு சிமியோன்
மல்வம்

# கோவை கொடுத்த கொடை



நாவண்ணன்

(7)

## சந்நியாசந் துறவு

கன்னடத் தே புகழ்கொண்ட துறவியை
கற்றவர் மெச்சி நின்றார் — இன்னும்
நன்னடத்தை, அன்பு, நாணயம் வாய்மையால்
நாட்டில் மதிப்படைந்தார்

வாழ்த்துக்கள் ஆயிரம் வந்து குவியினும்
வந்த புகழ்ச்சிக் கெல்லாம் — அகத்
தாழ்ச்சியினாலே தன்னடக்கமுடன்
தன்பணியைத் தொடர்ந்தார்

போத்துக்கல் தேசத்துப் போதகர் இருவர்
போதனை செய்யவந்தார் — அவர்
ஆத்தும சேவைக்கு அச்சாணியாய்த் தொண்டு
ஆற்றித் துணைபுரிந்தார்

வந்தவர் இருவர் வல்லவராயினும்
வார்த்தை மொழி அறிவில் — தம்
சொந்த மொழியன்றி இந்தியமொழிகள்
சொற்ப மேனும் அறியார்

இந்த நிலையினில் பன்மொழி வித்தகர்
இளையவர் யோசேவாசும் — துணை
தந்து உதவினர் மொழிபெயர்த்தளித்துத்
தத்துவ போதனைக்கே

சின்னவர் யோசேவாஸ் செய்தபணியதால்
செப்பிய போதனைகள் — யாவும்
தன்னவர் உள்ளங்கள் தம்மை அடைந்திடத்
தக்கபடி உரைத்தார்

மூவைந்து திங்களாய் மொழிபெயர்த்துதவி
மூலக்கல் லாய் விளங்கி — அந்தக்
கோவைப் பெரும்பதி எங்ஙணுமே பணி
கொட்டினர் ஒய்வுமின்றி

வல்லமை கண்டெவர் வாழ்த்திய போதிலும்
வாஸ் முனி நெஞ்சினிலே — கூர்
முள்ளெனவே ஈழச் சோதரர் எண்ணமே
முக்கியம் பெற்றதுவே

சந்நியாச சபை சார்ந்தவர் மட்டுமே
சத்திய வேதந் தன்னை — அன்று
அன்னிய நாடுகள் சென்று பரப்பினர்
அந்த நியதியினால்

ஈழப்பதியினில் இன்னலடைந்திடும்
இயேசு மதத்தவரின் — இன்னல்
மானத் துணைசெய்ய மாற்றுவழியின்றி
வாதை மனத்தடைந்தார்

இந்திய நாட்டவர்க் கிந்தச்சபைதனில்
இல்லை இடமதனால் — தனை
எந்தச சபையது ஏற்குமென எண்ணி
ஏக்க முடனிருந்தார்

மக்கள் மனங்களில் நிற்கும் இளங்குரு
மனத்தின் முடிவறிந்தோர் — ஆயர்
மிக்க வியப்புடன் தக்கபடி யிதை
மீளாய்வு செய்கவென்றார்

"ஆழக் கிணற்றினுள் ஆடுவிழுந்தங்கு
அவலக் குரல் எழுப்ப — அது
மீளத் துணை செய்ய ஆயன் கடமைக்கு
மீளாய்வு வேறெதற்கு?"

"சந்நியாசக் குழுவாகினால் மட்டுமே
சாத்திய மாகும் இது — இனி
எந்நியாயத்தையும் ஏற்கும் நிலையினில்
இல்லையான்" என்று விட்டார்

'நற்கெரிசன மலை' யெனக் கோவையர்
நவிலுமோர் குன்றினிலே — உள்ள
அற்புதச் சிலுவை ஆலய வீட்டிலே
அடக்கமோ டோர் சபையார்

மீட்பரின் காட்சியை மூன்றுமுறைகண்ட
'மிலாகிறித்தர்' என்று — இன்றும்
கேட்பவர் சொல்லிடும் வண்ணம் புகழினைக்
கொண்ட நிலையிலுள்ள

விதேசிகளில்லாத வீண்புகழ் இல்லாத
வறியவர் மூவர்மட்டே — கொண்ட
சுதேசிகள் சபையினில் நான்காம் மனிதனாய்ச்
சுவாமிவாஸ் சென்றடைந்தார்

கோவைத் தியான சம்பிரதாய
குருக்கள் சபைதனில் — தன்
தேவை முடித்திடத் தேவன் அழைப்பெனத்
தேர்ந்து அதிலிணைந்தார்.

(தொடரும்)

சுண்டுக்குளி சிவா நூலகம்

## வேதாகம வினுவிடைப் போட்டி — 11

விடைகளை மாத்திரம் தபால் அட்டையில், தெளிவாக எழுதி உங்கள் பெயர், முகவரியுடன் 1-9-87 ஆம் திகதிக்குமுன் பாதுகாவலன், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூ. 15/=, விடையும், பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 19-9-87இல் வெளிவரும்.

### வினுக்கள்

1. உச்சிமுதல் உள்ளங்கால்வரை ஒருகுறையும் இல்லாதவன் யார்?
2. அழகிய தோற்றமும் எழிலுள்ள முகமும் உடையவனுய் இருந்தவன் யார்?
3. மிகுந்த அழகியும் ஆண்தொடர்பு அறியாத அதிக எழிலுமுள்ள கன்னியுமாய் இருந்த பெண் யார்?
4. மிக அழகானவளும், விவேகமுள்ளவளுமாய் இருந்த பெண் யார்?
5. அரசமுடி தரித்துப் பேரழகியாய் இருந்த பெண் யார்?
6. ''எழில் படைத்த பேரழகி''. அவள் யார்?

விடைகளைப் பின்வரும் பகுதிகளிற் காணலாம்.

ஆதி 24, 39 1சாமு. 25 2சாமு. 14
எஸ்தர் 1, 2

### போட்டி — 10, சரியான விடைகள்

1. சவுல் 2. எலியாசு 3. அகியாசு 4. மிக்காசு
5. தானியேல் 3:21 6. சூசை

### போட்டி — 10 சரியான விடைகள் எழுதியவர்கள்

1. யே. யோக்கிம்தாசன், எமில்நகர், மன்னூர்.
2. பா. அருமை, சில்லாலை தெற்கு, சில்லாலை.
3. மி. விக்ரர், அம்மன்வீதி, சில்லாலை.
4. கொலஸ்ரிக்கா பிலேந்திரன், வட்டாரம்-2, அல்லைப்பிட்டி.
5. அ. தேவநேசம், தி. கு. பத்திமாகிரி, பண்டத்தரிப்பு.
6. பி. சிலுவைராசா, நவாலிதெற்கு, மானிப்பாய்.
7. வெ. யூஜின், அ. ம. தி. குரு, கொழும்புத்துறை, யாழ்.
8. S. டெலஸ்ரீனு, மல்வம், உடுவில்.
9. பொ. அன்ரன்டயஸ், 70/6, பழையபூங்காவீதி, யாழ்.
10. D. M. யோசவ், கிறீன்ரோட், பிராதனவீதி, மாதகல்.
11. யோ. அருட்செல்வி, கிறீன்ரோட், பிரதானவீதி, மாதகல்.
12. S. டிலான், பிரதானவீதி, தாழையடி.
13. A. நிலா, மாரீசன்பதி, இளவாலை.
14. A. லீலா, மாரீசன்பதி, இளவாலை.
15. A. மேரிறபேக்கா, மாரீசன்பதி, இளவாலை.
16. சு. யூஜின் பிரதிபா, மாரீசன்கூடல், இளவாலை.
17. சு. யூடிற் அனிற்ரு, மாரீசன்கூடல், இளவாலை.
18. செல்வி. சிறில் சாந்திகிறேஸ், அரசடிவீதி, நவாலி.
19. செ. அன்ரன்யூட், 35/1. டேவிற்வீதி, யாழ்ப்பாணம்.
20. செ. ரூபின்சன், இளங்கதிர் இல்லம், தாழையடி.
21. ம. பெனில்டஸ்லெம்பேட், வட்டாரம்-8, வங்காலை.
22. ஜெஸி செலஸ்தீன், செங்கதிர் இல்லம், தாழையடி.
23. செ. ஆன்செல்வதி குரூஸ், பொன்னகம், வங்காலை.
24. T. அருண், 11/1, கோவில் ஒழுங்கை, நாவாந்துறை.
25. S. சந்துஜா, 3ஆம் குறுக்குவீதி, நாவாந்துறை.
26. J. லக்ஷன், 21, 3ஆம் குறுக்குவீதி, நாவாந்துறை.
27. யே. நிமலா லெம்பேட், வட்டாரம்-4, வங்காலை.
28. றெ. எல்மே, வட்டாரம்-4, வங்காலை.
29. செ. மெனிக்ரேவதி குரூஸ், பொன்னகம், வங்காலை.
30. செ. நீல்றெமி குரூஸ், பொன்னகம், வங்காலை.
31. செ. ஜேன் பிரவதி குரூஸ், பொன்னகம், வங்காலை.
32. S. செல்வராஜ், சவேரியார்புரம், சிலாவத்துறை.

மக்கள் குரல்

## அஞ்சா நெஞ்சத் தலைவர்

திக்குத் திசை தெரியாமல் அபலைகளாக, அனுதைகளாக, அகதிகளாகக் காடுகளிலும், கழனிகளிலும், தேவாலயங்களிலும், கோவில்களிலும் பாடசாலைகளிலும், சந்தைகளிலும், வேறு பொது இடங்களிலும், அகதி முகாம்களிலும் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்து ஓர் நல் வழி காட்டும் தலைவனுக நம் பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் உரிய தன்மானத் தலைவனுக மத வேறு பாடின்றி, சாதி வேறு பாடின்றி சகல தமிழர்களாலும் வெளி நாடுகளில் உள்ள எமது தமிழ்த் தலைவர்களாலும், தந்தையாக தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளப் பட்ட அஞ்சா நெஞ்சத் தலைவர் நாம் கண்டு பெருமைப் படும் எமது ஆயர் தியோகுப் பிள்ளையே.

1984 ஆம் ஆண்டில் அரச படைகளால் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி காவலில் வைக்கப் பட்ட போது, கைது செய்யப் பட்ட இளைஞர்கள் பெற்ருேர்கள் மத வேறு பாடின்றி எமது ஆயர் அவர்களிடம் சென்று கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளை விடுதலை செய்விக்க வேண்டு மென்று தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும் கோரிக்கை விட்டதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

மக்கள் குரலே மகேசன் குரல் என்று கருதி மக்களின் வேண்டுகோளை ஏற்று 1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி ஜனுதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினுர்கள். அக் கடிதத்தில் குறிப்பிட்டார்கள். கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி வருடக்கணக்காக சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை மனிதாபிமானத்தின் பேரால் விடுதலை செய்யுங்கள் என்று.

1986 ஆம் ஆண்டு யாழ் சம்பத்ரிசியார் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் இலங்கை அரசாங்கம் தமிழர்களை கண்ட படி கொலை செய்கிறது. இந்தப் படு கொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நேரடியாகத் தலையிட்டு படு கொலைகளைத் தடுக்கும் காலம் வந்து விட்டது என்று பகிரங்கமாகக் கூறினுர்.

சென்ற 10-7-1987ல் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தைச் சேர்ந்த உயர் செயலாளர் திரு. பூரி அவர்கள் எமது ஆயர் அவர்களை ஆயர் இல்லத்திற் சந்தித்த போது தமிழ் மக்கள் தினமும் படும் இன்னல்கள் அனைத்தையும் அணுவணுவாக எடுத்துக் காட்டியதுடன் தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்ற இந்தியா உடனடியாக நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று மிகத் துணிவுடன் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருக்கிறுர்கள். இது இன்றைய தமிழராலும் ஏன் உலக மக்கள் அனைவராலும் பாராட்டப்படுகின்றது.

ஆசீர்வாதம் ஹென்றி
சுன்னுகம்.

# தேனருவி

### ஆண்டின் 21ஆம் ஞாயிறு: 23-08-87
## அதிகாரம் ஆண்டவனிடமிருந்து...

இசை 22: 19–23. உரோ 11: 33-36. மத். 16: 13-20.

மனித சமூகங்கள் அனைத்தும் நிர்வகிக்கப்பட வேண்டியன. சமூகத்திற்கென்ச் சில அமைப்புக்கள், நிர்வாகிகள் தேவைப்படுகின்றனர் இந்தச் சமூக அமைப்பிற்குத் திருச்சபையும், இறைமக்களும் கூட விதிவிலக்கானவர்களல்லர்.

இன்றைய நிர்வாக அமைப்புக்களில் போட்டி பூசல்கள், அதிகார வெறி, பாரபட்சம் போன்ற ஊழல்களுக்குக் குறைச்சல் கிடையாது. ''பசுத் தோல் போர்த்த ஓநாய்களாக'' பல ஆளுனர்கள் செயல் புரிகின்றனர்.

ஆனுல், இறைமக்கள் மத்தியில் நிலவ வேண்டிய நிர்வாகம் இறைவனின் வழிநடத்து தலை அடிப்படையாகக் கொண்ணம்; அவர் திறமை, பணம், செல்வாக்கு, அறிவு போன்றவற்றை உரிமை கொண்டார் என்றன்று. மாருக அவரது விசுவாசம் ''பாறை'' போன்று விளங்கிற்று. இறைவனின்தேர்வுக்குத் தகுதி படைத்தபேறு பெற்றவராய் விளங்கினுர்

இன்று, இறைமக்கள் மத்தியில் நிலவிடும் நிர்வாகங்கள், தீமைகள் மலிந்த சாக்கடைகளாவதேன்? பொறுப்பேற்றவர்கள் இறைவனின் பிரதிநிதிகளாவதை விடுத்து, தம் சொந்த விருப்பு வெறுப்புக்களை மட்டும் பிரதிபலிக்கும் அரசியல் வாதிகளாகின்றனர். பங்குத்தள நிர்வாகத்திற் பங்காளிகளாய் விளங்கும் ஆலய சபைகள், பக்திச் சபைகள்,


29. செ. மெனிக்ரேவதி குரூஸ், பொன்னகம், வங்காலை.
30. செ. நீல்றெமி குரூஸ், பொன்னகம், வங்காலை.
31. செ. ஜேன் பிரவதி குரூஸ், பொன்னகம், வங்காலை.
32. S. செல்வராஜ், சவேரியார்புரம், சிலாவத்துறை.
33. ஜெ. சுபநிதாடலிமா, வட்டாரம்-3, வசந்தம், வங்காலை.
34. இ. சியாமளா பெர்ஞன்டோ, வட்டாரம் 5, வங்காலை.
35. செ. ஜெசி அமல்ராணி, மாரீசன்கூடல், இளவாலை.
36. இ. ஜெயா, மாரீசன்கூடல், இளவாலை.
37. க. சகாயநாயகி, நொத்தாரிசுவளவு, இறகு வவுனியா.
38. அ. டியூக் குரூஸ், வட்டாரம்-3, வங்காலை.
39. அ. செனபோன்சோசை, வட்டாரம் 10, வங்காலை.
40. அ. கொலஸ்ரிக்கா கலா, மாரீசன்பதி, இளவாலை.
41. றஜனி அல்போன்ஸ், மாரீசன்பதி, இளவாலை.
42. த. அன்ரன் குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
43. கி. நிலுஜாடயஸ், தாழ்வுபாடு, மன்னார்.
44. ஸ். பிரதாப் குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
45. ஞா. ஒஸ்வல்ட் மொறுய்ஸ், வட்டாரம்-1, வங்காலை.
46. த. ஜெரூட் குரூஸ், வட்டாரம்-1, வங்காலை.
47. T. நியூட்டன், தாழ்வுபாடு, மன்னார்.
48. த. சகாயம்பல்டானே, தாழ்வுபாடு, மன்னார்,
49. த. கமல் எட்வின், தாழ்வுபாடு, மன்னார்.
50. த. கமிலஸ் குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
51. த. யூட்லஸ் குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
52. அ. நிக்சன் சோசை, வட்டாரம்-2, வங்காலை.
53. அ. ரணஸ்ற் லெம்பேட், வட்டாரம்-3, வங்காலை.
54. அ. திதிமுஸ் அன்புராஜ் லெம்பேட், வட்டா-2, வங்காலை.
55. அ. இனசென்ற் இன்பராஜ், லெம்பேட், வட்டா 2, வங்.
56. ச. யேசுநேசன் லெம்பேட், வங்காலை-2, மன்னார்.
57. அ. லறிசா லெம்பேட், வட்டாரம் 3, வங்காலை.
58. அ. ஜெயதரன் லெம்பேட், வட்டாரம்-3, வங்காலை.

**பரிசுபெறும் நற்பேறுளர்**

A. நிலா, மாரீசன்பதி, இளவாலை.

வைக்கப்பட்டிருந்தவர்களை மனிதாபிமானத்தின் பேரால் விடுதலை செய்யுங்கள் என்று.

## நெஞ்சம் மறக்கவில்லை



ஞா. வில்விறெட்
உதிர்வு 12-02-87

தொட்டதெல்லாம்
பொன்ஞக்கி-நீ
விட்டெம்மை
மறைந்து விட்டாய்
கூட்டமாய் நாமிருந்து
வாடுகிறோம்-நீ
விட்ட இடம்
வெறுமை வெறுமை

உன்பிரிவால் துயருறும்
சில்லாலை உறவினர்

ஆனால், இறைமக்கள் மத்தியில் நிலவ வேண்டிய நிர்வாகம் இறைவனின் வழிநடத்துதலை அடிப்படையாகக் கொண்டது. தேர்வுஇறைவனுடையது. தலைமைத்துவம் ஓர் அழைப்பு. ''யாவும் ஆண்டவனிடம் இருந்தே வருகின்றன'' (உரோ. 11/35) இறைவன்தாமே, தலைவர்களையும், வழிகாட்டிகளையும் தேர்வு செய்கின்றார். அவர்கள் பாதை மாறித் தீமையினை விரும்பும் போது பதவியிலிருந்து தள்ளப்படுகின்றனர். ஆலயக்காரியக் காரணக விளங்கிய சோப்ஞ இதற்கு ஓர் உதாரணமாகும்.

இயேசுவின் காலத்தில், சமூகத்தில் மூத்தவர்களாக விளங்கிய சட்டவல்லுநர்களும், பரிசேயர்களும் புதிய இறைமக்கள் சமூகமான திருச்சபையின் தூண்களாகவில்லை. விண்ணரசின் திறவுகோல் அவர்களது உரிமையாகவில்லை. அதிசயிக்கக் கூடிய வகையில், இராயப்பர் தலைவராகிறார். அதிகாரமும், தலைமைத்துவமும் ஆண்டவரிடம் இருந்து நேரடியாகக் கொடுக்கப்படுகின்றன. அவர் அதிகாரமுள்ள தலைமை—அப்போஸ்தலராகிறார். இதற்குக் கார

பங்குத்தள நிர்வாகத்திற் பங்காளிகளாய் விளங்கும் ஆலய சபைகள், பக்திச் சபைகள், ஒன்றுகூடல்கள் இறை வழி நடத்துதலைத் தட்டிக் கழித்து தமது சொந்தச் சலுகைகளையும், பாதுகாப்பையுமே தேடி, அதிகாரத் துர்ப்பிரயோகம் செய்கின்றனர்.

இதன் விளைவாகக் கூட்டு வாழ்வில், இறைவனை இனம் கண்டுகொள்ள முடிவதில்லை. இயேசுவை இன்னும் அறியாதோர் உள்ளங்களில் தவறான, தப்பறையான கொள்கைகளையும், மதிப்பீடுகளையும் விதைத்து விடுகின்றோம். இதனல், சந்தேகங்களும், வன்முறைகளும் திருச்சபையில் மலிகின்றன,

எனவே எமக்கு அருளப்படும் அத்தஸ்துக்களையும், பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் விசுவாச ஒளியிற் பார்க்க வேண்டும். எந்நிலையிலும் எம் விசுவாசம் 'பாறை' போன்று அசையாதிருக்க வேண்டும்-

அதிகாரங்களை மக்கள் நலன்கருதிப் பயன்படுத்துவோம். இறைவனின் இறை அரசைப் பரப்புவதற்காக.

சுவாமி ஜீவா போல், அ. ம. தி.

**திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப் பத்திரிகை**

பாதுகாவலன்
PATHUKAVALAN

# அருள்திரு சிங்கராயர் விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அருள் திரு ஆபரணம் சிங்கராயர் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கத்தினால் ஆகஸ்டு 12ஆம் திகதி புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டார். 1982 கார்த்திகை 14இல் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இவர் விடுதலை செய்யப்பட்டபோது வடமாநில அ.ம.தி.முதல்வர் அருள்திரு லூயிஸ் பொன்னையா, அருள்திரு ஃபோர்ப்ஸ் ஆகியோர் இவரை அழைத்துவந்தனர்.

## சில்லையூர் வெளியீடு

ஆசாரத்துக்குரிய யோசவ்வாஸ் முனிவர் இலங்கை வந்த 300 ஆம் ஆண்டு நினைவுமலர் ஒரு சிறந்த வாழ்க்கை வரலாற்று நூலாகச் சில்லையூர்ப் பகுதி வைத்தியகலாநிதி சுகந்தன் இஞ்ஞாசித்தம்பி அவர்களை இதழ் ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது. யோசவ்வாஸ் முனிவர் அவர்களை இன்றைய கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்களுக்கும், தமிழ்கூறும் நல்லுலகிற்கும் வெளிப்படுத்திய பெருமை சில்லாலைப்பங்கு மக்களுடையது. ஆயர்களின் ஆசிச்செய்திகளும், அருளுரைகளும், அடிகளார் இலங்கையில் ஆற்றிய திருப்பணி, சமூகத்தொண்டு, புனிதவாழ்வு பற்றிய கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. யோசவ்வாஸ் முனிவர் சில்லாலைப் பங்கில் 30மாதங்களாக, இலைமறை காயாக இருந்து இறைபணிசெய்துள்ளார். ஆகையால், அவரின் வாழ்க்கை வரலாற்றைச் சிறப்புற மதிப்பீடு செய்யும் பெருமை அவ்வூர்மக்களுக்கு உரித்தானது. சில்லாலைப்பகுதியில் வளமான வாழ்க்கை நதியான குழந்தைப் பாக்கியமும், குறையாத செல்வமும், முனிவர் மூலமாகத்தான் ஏற்பட்டதென்பதை அன்னை யூலாலி அவர்கள் இம்மலரிற் குறிப்பிட்டுள்ளார். ஆய்வுக்கட்டுரைகள் அடிகளாரைப் புனிதர்வரிசையில் நிறுத்துவதற்குச் சான்றுகளாகவும் அமைந்துள்ளன.

ச. அ. செபரத்தினம்
பண்டத்தரிப்பு

## கிறிஸ்தவத்தின் 600வது ஆண்டு விழா

பால்டிக் நாடாகிய லித்துவேனியா மனந் திருப்பப்பட்டதன் 600வது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்ச்சிகள் வத்திக்கானில் இடம் பெற்ற போது திருத் தந்தை லித்துவேனிய ஆயர் ஒருவருக்கு முத்திப் பேறு பெற்ற பட்டத்தை அளித்தார்

திருத் தந்தை லித்துவேனியாவுக்கு வருவதைச் சோவியத் அதிகாரிகள் தடை செய்திருந்த போதிலும் பல நாடுகளிலுமிருந்து ரோமாபுரிக்கு வந்திருந்த லித்து வேனியர் மத்தியில் அவர் இவ் வைபவத்தை நிகழ்த்தினார்.

## முதலாவது ஆசிய தூதுவர்

ஐம்பத்திரண்டு வயதான பேராயர் ஐவான் டயஸ் கொரியாவுக்காகத் திருத் தந்தையின் தூதுவராக நியமனம் பெற்றுள்ளார். இவர் இதற்கு முன் கானா, டோகோ ஆகிய நாடுகளுக்குத் தூதுவராக இருந்தவர்.

பம்பாயிற் பிறந்தவரான பேராயர் டயஸ் கொரியாவின் ஆறுவது தூதுவரும் இப் பதவியை வகிக்கும் முதல் ஆசியருமாவார்.

இவருக்கு முன் தூதுவராக இருந்த பேராயர் பிரான்செஸ்கோ மொன்டரிஸி 1983 இலிருந்து இப் பதவியை வகித்தவர்.

## சிறுவனின் பரதநாட்டிய நிகழ்ச்சி

பிதா பிரான்ஸிஸ் பார்போஸாவின் சிஷ்யனான 17 வயதான ராகுல் டி சூசா' பண்டராவிலுள்ள புனித திரேசாள் பாடசாலை மண்டபத்திற் பெருந் தொகையான நாட்டியக் கலைஞர்கள், ஆசிரியர்கள் முன்னிலையிற் பரத நாட்டிய நிகழ்ச்சியொன்றை அளித்தார். இவற்றுட் சில நடனங்கள் மங்கள வார்த்தை, கிறிஸ்து குருடனைக் குணமாக்கல் போன்ற கிறிஸ்தவ கருத்துக்களைக் காட்டுவனவாய் அமைந்திருந்தன.

ராகுல் இளவயதிலிருந்தே பரத நாட்டியத்தைக் கற்பதில் ஆர்வம் காட்டினார். இதனைக் கண்ட பிதா பார்போஸா 12 வது வயதில் அவருக்குப் பிரதம் கற்பிக்க ஆரம்பித்தார்.

பிதா பார்பேராஸாவின் கலைக் குழுவினருடன் இவர் தென் இந்தியா வெங்கும் சென்று நடன நிகழ்ச்சிகளை அளித்துள்ளார்.

பம்பாய்ப் புனித சவேரியார் கல்லூரியின் இரண்டாவது ஆண்டு மாணவரான ராகுல் ஒரு சிறந்த நடனக் கலைஞர்.

## மதத்தைப்பற்றிய மார்க்சிய கருத்துக்கள் வலுவிழக்கின்றன — திருத்தந்தை

அண்மையிற் போலாந்துக்கு வருகை தந்த திருத்தந்தை, தாம் முன்பு ஆசிரியராகக் கடமை புரிந்த ஒரு பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தார். அங்கு போலாந்தின் பல பாகங்களிலுமிருந்து வந்திருந்த 500 கல்விமான்கள் மத்தியில் உரையாற்றுகையில் மார்க்சீயவாதிகள் சமயத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் தற்போது வலுவிழந்து வருவதாகக் குறிப்பிட்டார். லுபிலின் நகரிலுள்ள இப் பல்கலைக் கழகம்,கிழக்கு ஐரோப்பாவிலேயே அரச அங்கீகாரம் பெற்ற ஒரே யொரு கத்தோலிக்க பல்கலைக் கழகமாகும். ஆயினும், அரசின் நெருக்குதலினால் 1985 ஆண்டிற்குப் பின் நூற்றுக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் அரசியற் காரணங்களுக்காகப் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திருத்தந்தை அன்று காலையில் லுபிலின் நகருக்கு வெளியேயுள்ள நாஜிகளின் படுகொலை முகாமான மாஜதானேக்கைத் தரிசித்து அங்கு கொலை செய்யப்பட்ட 360,000 பேரின் சாம்பலின் மீது எழுப்பப்பட்ட ஞாபகார்த்த தூபியில் மலர்களை வைத்துச் செபித்தார். அம் முகா

## விடுதலை இறையியல் மீதுள்ள ஐயப்பாடு

விடுதலை இறையியல் மீது வத்திக்கான் கொண்ட ஐயப்பாடு இன்னும் நீங்கவில்லையென ஓர் இத்தாலிய பிரசுரிப்பாளர் கூறியுள்ளார். பிதா லியனார்டோ பொவ் என்னும் பிரசீலிய ஆசிரியரின் நூலுக்கு அசிசி நகர் ஆயரினால் தடை விதிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

மூன்றும் மண்டல நாடுகளின் நோக்கில் இறையியல்

ஆனி 6 ஆம் திகதி அறிமுகப்படுத்த விருக்கையிலேயே அவை ஆயரால் தடைசெய்யப்பட்டன. நூற்றெருகுதி முழுவதையும் திருச்சபை அதிகாரிகள் ஆராய்ந்து முடியவில்லை என்பதே இத் தடைக்குக் காரணமாகக் கூறப்பட்டது.

''திருச்சபை அருங்கொடையும் வல்லமையும்'' என்ற நூலில் வெளியிடப்பட்ட சில

## பிலிப்பீன்சில் ஆழமான விசுவாசம்

கத்தோலிக்க விசுவாசம் வெவ்வேறு கலாசாரங்களில் எவ்வாறு வாழ்ந்து காட்டப்படுகிறது என்பதைக் காணப் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வந்த அமெரிக்க குருமடத் தலைவர்கள், அந் நாட்டிற் கத்தோலிக்க விசுவாசம் ஆழமாய் வேரூன்றி இருப்பதாகப் பெரிதும் பாராட்டினர். திருச்சபை மீதும், தன் அயலார் மீதும், மக்கள் அக்கறை கொண்டிருக்கின்றனர். வழிபாட்டு முறைகள் மிக அழகாக இருக்கின்றன என்றும் அமெரிக்க அருள் தந்தையர்கள் கூறினர். அமெரிக்காவில் இப்போது குருமடங்களில் 9000 மாணவர்கள் உள்ளனர் என்றும், 20 ஆண்டுகளுக்கு

## திருத்தந்தை செல்லமாட்டார்

அடுத்த ஆண்டு தென்னாபிரிக்க நாடுகளிற் சுற்றுப் பயணம் மேற்கொள்ள விருக்கும் கத்தோலிக்கத் திருச்சபைத்

யென ஓர் இத்தாலிய பிரசுரிப்பாளர் கூறியுள்ளார். பிதா லியனுர்டோ பொவ் என்னும் பிரசீலிய ஆசிரியரின் நூலுக்கு அசிசி நகர் ஆயரினுல் தடைவிதிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினுர்.

மூன்றும் மண்டல நாடுகளின் நோக்கில் இறையியல் பற்றிய 50 புத்தகங்களைக் கொண்ட நூற்றெருகுதியின் முதலிரண்டு புத்தகங்களையும் அம் மறை மாவட்டத்தில் தடையப்பட்டன. நூற்றெருகுதி முழுவதையும் திருச்சபை அதிகாரிகள் ஆராய்ந்து முடியவில்லை என்பதே இத் தடைக்குக் காரணமாகக் கூறப்பட்டது.

''திருச்சபை அருங்கொடையும் வல்லமையும்'' என்ற நூலில் வெளியிடப்பட்ட சில கருத்துக்களுக்காக 1985 இல் பிதா பொவ் இறையியல் பற்றிப் போதிப்பதும் எழுதுவதும் தடை செய்யப்பட்டிருந்தன.

## எமது வேண்டுகோள்

இவ்வளவு சிக்கனமாக, இத்தனை அம்சங்களுடன் பாதுகாவலன் வருவதோடு, நீங்கள் கேட்டவுடன் கேட்டதொகைப் பத்திரிகைகளை உங்கள் வாயிலண்டை அனுப்ப நாம் தயாராக இருக்கிறோம். அதனை வாங்கி வாசிக்கும்படி ஊக்குவிக்குமாறு மறைப்பணியாளர்கள், பக்திச்சபை அங்கத்தவர்களைப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

ஆ-ர்

## "எம் கருத்து" குறள் தெளிவுரை

உயர்ந்தோர் நட்பை விரும்பிப் பெறுவதும், என்றும் அதனை இழந்திடா வகையில் மகிழ்வுடன் இணைந்து வாழ்வதும் சிறந்த அறிவாகும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யேயுள்ள நாஜீகளின் படுகொலை முகாமான மாஜதானேக்கைத் தரிசித்து அங்கு கொலை செய்யப்பட்ட 360,000 பேரின் சாம்பலின் மீது எழுப்பப்பட்ட ஞாபகார்த்த தூபியில் மலர்களை வைத்துச் செபித்தார். அம் முகாமிலிருந்து உயிர் தப்பிய வாண்டா ஓசொவ்ஸ்கா என்னும் பெண்ணைச் சந்தித்து உரையாடினுர்.

மாலையிற் பத்து இலட்சம் பேர் சமுகமாயிருந்த திருச்சடங்கில் 46 குருக்களைத் திருநிலைப்படுத்தினுர். குருத்துவத்தை "ஒரு சமூக திருவருட் சாதனம்" என அழைத்த திருத்தந்தை ''மக்களின் மனித மாண்பை வலியுறுத்தி அவர்களை விடுவிக்க வேண்டும்'' எனப் புதிதாகத் திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களுக்கு கூறினுர்.

இத் திருச்சடங்கு போலாந்திற் குருத்துவ அழைத்தல்கள் பெருகியுள்ளமையை எடுத்துக்காட்டியது. தற்போது அங்கு ஏறக்குறைய 8000 குருமாணவர் உள்ளனர்.

## திருத்தந்தை செல்லமாட்டார்

அடுத்த ஆண்டு தெற்காபிரிக்க நாடுகளிற் சுற்றுப் பயணம் மேற்கொள்ள விருக்கும் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் திருத் தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர், தென்னுபிரிக்காவுக்குச் செல்லமாட்டார் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நிற வெறிக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் தென்னுபிரிக்காவுக்குத் திருத்தந்தை செல்லக் கூடாது என்று தெற்கு ஆபிரிக்க நாடுகளின் கத்தோலிக்கத் திருச்சபை ஆயர்கள் மேற்கொண்ட தீர்மானத்தை வத்திக்கான் அரசு அங்கீகரித்துள்ளது.

மீதும், மக்கள் அக்கறை கொண்டிருக்கின்றனர். வழிபாட்டு முறைகள் மிக அழகாக இருக்கின்றன என்றும் அமெரிக்க அருள் தந்தையர்கள் கூறினர். அமெரிக்காவில் இப்போது குருமடங்களில் 9000 மாணவர்கள் உள்ளனர் என்றும், 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த எண்ணிக்கையிற் பாதி இஃது என்றும் அமெரிக்காவில் இருந்து வந்த அருள் தந்தையர்கள் தெரிவித்தனர்.

## புதிய மறைவட்டம்

கேரள மாநிலத்தில், கோட்டப்புறம் என்ற புது மறைவட்டத்தைத் திருத்தந்தை ஏற்படுத்தியிருக்கிறுர். கோட்டப்புறத்தின் முதல் ஆயராக அருள்தந்தை பிரானசிஸ் கலரக்கால் நியமிக்கப்பட்டிருக்கிறுர். வீரப்போலி மறை மாநிலத்தில் இருந்து கோட்டப்புறம் பிரிக்கப் பட்டிருக்கிறது.

## வெகுவிரைவிற் பாதுகாவலனில்

க. பொ. த. (உ. த.) மாணவர்கள் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பதற்கு வசதியாகப் பாடத்திட்டத்தில் அடங்கிய பகுதிகளை விரிவாக, தொடர்ச்சியாகத் தரவுள்ளோம். பொதுமக்கள் பயன்பட த்தக்கதாகவும் இவ் ஆக்கங்கள் அமையும். உயர்தரவகுப்பு மாணவர்கள் மட்டுமன்றி, ஆசிரியர்களும் எதிர்காலத் தேவை கருதி மற்றைய மாணவர்களும் இவற்றைச் சேர்த்துவைத்துப் பயனடைய முடியும்.

ஆ-ர்

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னுேடிருக்கிறேம் என்கிறுர் ஆண்டவர்**